# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 18.04.2023 supeedsam.com supeedsam@gmail.com







# பௌத்த நாடு என்ற மமதையில் ஆடும் பிக்குகள்

**கடவுள் இல்லை என்று கூறக்கூட உரிமை உண்டு**



சிங்கள பௌத்த பேரினவாதிகள், வடக்கு கிழக்கில் மத ஆதிக்கத்தை திணித்து அதன் மூலமாக ஒரு இன மேலாதிக்கத்தை திணிக்கின்ற செயற்பாட்டினை கிரமமான முறையில் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் முன்னெடுப்பதாக தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## எதிர்வரும் 25 ஆம் திகதி வட,கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு அழைப்பு

எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நில ஆக்கிரமிப்பு, தொல்பொருள் சின்னங்கள், மரபுரிமைகள் அழிப்பு, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராக இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

நில ஆக்கிரமிப்பு மற்றும் தொல்பொருளை பாதுகாக்கும் பெயரில் இடம்பெறும் பௌத்த மயமாக்கலை கண்டித்து கதவடைப்பு போராட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## தேசிய அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி?

தேசிய அரசாங்கத்திற்கான அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தாம் உட்பட பல கட்சி பிரதிநிதிகளை ஜனாதிபதி ஏற்கனவே அழைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஒரே நாளில் நான்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள்!

### வேறு தினத்திற்கு மாற்றியமைக்குமாறு சாணக்கியன் கோரிக்கை

பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர்களிடம் ஒருமைப்பாடு இன்மையில் ஒரே நாளில் நான்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை நடாத்துவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அக் கூட்டங்களை வேறு தினத்திற்கு மாற்றியமைக்குமாறும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



## நாடாளுமன்ற தமிழ் அரங்கத்திற்கு விக்னேஸ்வரனும் ஆதரவு!

நாடாளுமன்ற தமிழ் அரங்கம் என்ற முன்மொழிவுக்கு தமிழ் மக்கள் கூட்டணி செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தனது ஆதரவை மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## 99 வருட குத்தகைக்கு 15 ஆயிரம் ஏக்கர் காணி: வடக்கு கிழக்கில் ஆழமாக காலூன்றவுள்ள சீனா; அச்சத்தில் இந்தியா!

இலங்கைக்கு சீனா கடன் வழங்கியுள்ளது, என்பதற்காக வடக்கு கிழக்கிலுள்ள காணிகளை அபகரிக்கும் செயற்பாட்டினை உடனடியாக நிறுத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சீனாவின் ஆதிக்கம் என்பது இந்தியாவின் தேசிய

02 ஆம் பக்கத்தில்...

## மே தின கூட்டங்களை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானம்!

மே தின பேரணிகளையும், கூட்டங்களையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ், சிங்கள புத்தாண்டு முடிவடைந்த கையோடு இதற்கான ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு

02 ஆம் பக்கத்தில்...









## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னைமடியில்
29 * 04 * 1943



இறைவனடியில்
17 * 03 * 2023

### அமரர் மாரிமுத்து சாமித்தம்பி

ஓய்வு நிலை உத்தியோகத்தர் – இலங்கை மின்சார சபை, மட்டக்களப்பு

(கிழக்கு இலங்கையில் புகழ் பூத்த சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்–தின் முன்னாள் வன்னிமை பிரதம தர்ம கர்த்தா)

"நிஜம் என்பதனை தொலைத்தாலும் – என்றும்
நிழலாய் தொடரும் உங்கள் நினைவு..."

மட்டக்களப்பு – சித்தாண்டி – 04 சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் கடந்த 17.03.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு, நேரில் வந்தும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் மாலைகள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஊடாக எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் – குடும்பத்தினர்
பழைய சந்தை வீதி, சித்தாண்டி – 04, மட்டக்களப்பு.
சகோதரர் : மாரிமுத்து – செல்லத்துரை
(ஸ்ரீ ரமண மகரிஷி அறப்பணி நிலையத்தின் தலைவர், மட்டக்களப்பு)

# 75 வயதில் இலங்கை ஒரு தோல்வியுற்ற நாடு!

## அரசியல் அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்த தவறிவிட்டோம்!

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற போது பொறாமைப்படக்கூடிய சமூகக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்தது. எனினும் 75 வயதில் இலங்கை ஒரு 'தோல்வியுற்ற நாடு' என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர் மதன்ஜீத் சிங் விரிவுரையின்போது, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தெற்காசிய அறக்கட்டளை மற்றும் சென்னை ஆசிய இதழியல் கல்லூரி என்பன இதனை இணையவழியாக ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வின்போது மேலும் தமது கருத்துக்களை பதிவுசெய்த சந்திரிகா குமாரதுங்க, 75 ஆண்டுகள் என்பது ஒரு தேசம் கணிசமான முன்னேற்றத்தை அடைய எடுக்கும் நீண்ட காலமாகும்.

இந்தநிலையில் காலனித்துவ ஆட்சியாளர்களால் 450 வருடங்கள் அழிக்கப்பட்ட பின்னரும் கூட, சுதந்திரத்தின் போது, இலங்கை சிறந்த சமூக-பொருளாதார குறிகாட்டிகளில் சிலவற்றைக் கொண்டிருந்தது.

எனினும் இன்று 75 வயதில், இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாக மாறிவிட்டது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷர்களை குற்றம் சாட்டிய அதேவேளை, ஊழல் மற்றும் முறையான தேசத்தை கட்டியெழுப்புவதில் இலங்கையின் தோல்வியே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என முன்னாள் ஜனாதிபதி குறித்த நிகழ்வின் பின்னரான செவ்வியில் குறிப்பிட்டதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷக்கள் காலத்தில், நீதித்துறை, காவல்துறை மற்றும் பொதுச் சேவை உட்பட ஜனநாயக நிர்வாகத்தின் முக்கிய தூண்களில் பரவலான ஊழல் ஊடுருவியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் இலங்கை, பல்லின மற்றும் சகல மத சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு ஐக்கிய பன்மைத்துவ அரசை உருவாக்கத் தவறிவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையை உறுதிப்படுத்த கடந்த 75 ஆண்டுகளாக தவறிவிட்டோம் என இரண்டு முறை ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அதேநேரம், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு 'ஜனநாயகமானது அல்ல' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2000ம் ஆண்டில் புதிய அரசியலமைப்புக்கான தமது சொந்த முன்மொழிவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

## மற்றுமொரு சர்ச்சை: எல்லை நிர்ணய வரைவு அறிக்கை

பிரதமரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டிருந்த எல்லை மீள் நிர்ணய வரைவு அறிக்கையில், பல்வேறு குறைபாடுகள் உள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து சமூகமட்ட அமைப்புக்கள் அவர்களின் எழுத்துமூல பரிந்துரைகளை குழு தவிசாளரின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிய அறிக்கை தொடர்பில் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்க சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் பெறப்படாமலேயே இவ் எல்லை மீள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிர்வாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படாமை மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

## மே தின கூட்டங்களை பிரமாண்டமாக

ஏற்பாட்டுக்குழுக்களுக்கு கட்சி தலைமைகள் கட்டளையிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன கொழும்பை மையப்படுத்தியே மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் நிகழ்வுகளும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளன.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1936 * 11 * 12



மறைவு
2023 * 04 * 17

### அமரர். விக்டோரியா வடிவேல்

தகவல் : குடும்பத்தினர்

## 99 வருட குத்தகைக்கு 15 ஆயிரம் ஏக்கர் காணி;

பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் எனவே சீன அரசாங்கம் தமிழர் பகுதிகளுக்கு ஊடுருவுவதை தவிர்த்து கொள்ள வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்திடம் மீள கடனை பெற்றுகொள்வதற்கான வழிகளை சீன அரசாங்கம் பின்பற்ற வேண்டும் என்றும் மாறாக அரசாங்கத்திற்கு வழங்கிய கடன்களுக்கு ஈடாக, வடக்கு கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் காணிகளை அபகரிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஹம்பாந்தோட்டை மற்றும் மதனை அண்டிய பகுதியில் சுமார், 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு என்பன சீன அரசாங்கத்திற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன் தொடர்ச்சியாகவே வட கிழக்கிலும் சீனர்கள் சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டள்ளார்.

குறிப்பாக கடலட்டை குஞ்சுகளை வளர்க்க கூடிய தொழில் நுட்பம் சீனர்களிடம் மாத்திரமே உள்ளதால், கடலட்டைப் பண்ணைகளை ஊக்குவிக்கும் நோக்கில் வடக்கு மீனவர்களை சந்திப்பதாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மீனவர்களுக்கு உலர்உணவு பொருட்களை இலவசமாக வழங்கி வருவதாகவும் இவ்வாறு வடக்கில் பல வேலைத்திட்டங்களை சீனா முன்னெடுத்துள்ளதாகவும் அவற்றை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் வலிறுத்தியுள்ளார்.

## நாடாளுமன்ற தமிழ் அரங்கத்திற்கு

இதற்கமைய, TELO, DPLF, TMK ஆகிய கட்சிகள் தமது அதிகாரபூர்வ ஆதரவை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் WNF, UPF, DPF ஆகிய கட்சிகளுக்கு மேலதிகமாக தெரிவித்துள்ளன.

## தேசிய அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்த

அதன் பிரகாரம், இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு தந்திரோபாயங்களின் ஊடாக அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ள முயற்சிகள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## எதிர்வரும் 25 ஆம் திகதி வட,கிழக்கு

இதற்கமைய எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய பீதியில் முழுமையான கதவடைப்பு போராட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இந்த போராட்டத்திற்கு ஆதரவு கோரப்பட்ட நிலையில் இந்த போராட்டத்தை ஆதரிப்பதாக முஸ்லிம், மலையகத்தின் பிரதான அரசியல் கட்சிகள் அறிவித்துள்ளன. மேலும் எதிர்வரும் 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அன்றைய நாளில் நாடாளுமன்றத்திற்குள்ளும் போராட்டம் நடத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம், கல்வியங்காட்டிலுள்ள, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் இதுதொடர்பிலான சந்திப்பு இடம்பெற்றது. இதில் மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் கலந்து கொண்டிருந்தது.

இதேநேரம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இந்த போராட்டத்தை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது.

## ஒரே நாளில் நான்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட காலமாக பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் நடைபெறாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவது தொடர்பில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் எதிர்வரும் 19.04.2023 ஆம் திகதி அன்று காலை மற்றும் மாலை வேளைகளில் இவ்விரு கூட்டங்களாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், நேற்றைய தினம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதுடன் அக் கூட்டங்களை வேறு தினத்திற்கு மாற்றியமைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அக் கடிதத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர்களிடம் ஒருமைப்பாடு இன்மையால் ஒரே நேரத்தில் இரு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், மக்கள் பிரதிநிதியாகிய தன்னால் குறித்த கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளதுடன், அக் கூட்டங்களை வேறு தினத்திற்கு மாற்றியமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி காலை 09.30 மணிக்கு ஏறாவூர் பற்று பிரதேச செயலக கூட்டம் நடைபெறவுள்ள அதே நேரம் மண்முனை தென் எருவில் பற்று கூட்டம் நாடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிற்பகல் வேளையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் கூட்டம் நடைபெறவுள்ள அதேநேரத்தில் மண்முனை பற்று பிரதேச செயலகத்திலும் இக் கூட்டத்தினை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பௌத்த நாடு என்ற

விசேடமாக சைவ கோவில்கள், பாரம்பரியமாக மக்கள் வழிபட்டுவந்த கோவில்கள் அழிக்கப்படுவதும் அங்கு மக்கள் செல்வதை தடுப்பதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு நாட்டில் மக்களுக்கு இருக்கின்ற அடிப்படையான உரிமைகள், பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் மாறாக அதனை எந்த தரப்பினராலும் நிராகரிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக தனி மனிதன் சிந்திக்கின்ற உரிமை மற்றும் தான் சார்ந்த மதத்தினை வழிபடுகின்ற உரிமையும் எந்த மதத்துடனும் சேர்ந்து கொள்ளுகின்ற உரிமையும் கடவுள் இல்லை என்று கூறுவதற்கு கூட அடிப்படை உரிமை கொடுக்கப்பட்டுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நாடு பௌத்த நாடு என்ற மமதையில் அரசாங்கத்தின் உதவியோடு பௌத்த பிக்குகளும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊடகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த பெருமகனை இழந்தோம்

## கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்



ஊடகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த பெருமகனை இழந்து விட்டோம். அவருடைய வாழ்க்கை அனுபவங்கள் வழிகாட்டல்கள் எதிர்கால ஊடகத்துறையினருக்கு உத்வேகத்தைக் கொடுக்கட்டும் என கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் மறைந்த மூத்த ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் அவர்களின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாப அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் நம்மை விட்டு பிரிந்து கொடுத்திருக்கும் பாதிப்பு மிகத் துயரமானது. ஊடகத்துறை மீது பேரார்வமும் மனத்துணிவும் கொண்டிருந்த பெருமனிதனை இழந்துவிட்டோம் என்று தேற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஈழநாடு, தி ஐலண்ட், ரொய்ட்டர், பிபிசி போன்ற ஊடகங்களின் செய்தியாளராக் கடமையாற்றி இறுதி மூச்சுவரை வீரகேசரியின் ஊடகவியலாளராகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

நீண்ட காலமாக மரணத்திற்கெதிராகப் போராடிக்கொண்டே தன்னுடைய வாழ்நாள் சாதனையாக கால அதிர்வுகள், வாழத்துடிக்கும் வன்னி, மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள் ஆகிய மூன்று மூன்று நூல்களையும் எழுதி நான்காவது நூலான நினைவுகள் நிகழ்வுகள் நெஞ்சில் மோதும் எண்ண அலைகள் என்ற நூலை நிறைவு நிலைக்குக் கொண்டுவந்திருந்தார். நான்காவது நூலின் நிறைவுக்கு முன்னர் அவர் மரணத்தை அணைத்துக் கொண்டார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும் சிவராம் ஞாபகார்த்த மன்றமும் இணைந்து வெளியிடும் 'தராக்கி ஈழத்தமிழ் ஊடக முன்னோடி' நூலில் அவருடைய 'சிவராம்- தமிழ் ஊடகத்துறையினதும் அரசியலினதும் வரலாற்று நாயகன்' என்ற சிறப்பான கட்டுரையை எழுதியுள்ளார்.

76 வயதுடைய பொன்னையா மாணிக்கவாசகம், இலங்கையின் மூத்த ஊடகர் மட்டுமல்ல, தலை சிறந்த சமூக சிந்தனைவாதியும், இறுதி மூச்சு வரை, தற்துணிவுள்ள பேனா முனை போராளியாகவும் திகழ்ந்தார். யுத்த காலங்களில் பிபிசி தமிழோசைக்காக அவர் வழங்கி வந்த செய்திகள், தமிழ் மக்கள் மத்தியில் இவருடைய ஆளுமையை வெளிப்படுத்தி இருந்தது. செய்திகளை நடுநிலை தன்மையோடு, உள்ளதை உள்ளதாகச் சொல்லி, யுத்த நிலைமையையும் தமிழ் மக்களின் அவலங்களையும் உலகுக்கு வெளிப்படுத்திய ஊடகவியலாளர்.

பல உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலோடும் சோரம் போகாமலும் செயல்பட்ட துணிச்சல் மிகு பேனா முனை போராளி அத்துடன் உண்மைகளை மீள மீள பல தடவைகள் உறுதிப்படுத்தி வெளியிடுகின்ற அவருடைய பாங்கு ஊடகத்துறையில் மிக முக்கியமானது.

செய்திகள் பல்வேறு பிரச்சினைகளைக் கொடுக்கக்கூடியவை என்ற வகையில் அவர் எழுதிய செய்திக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும் விடுதலைக்குப் பின்பும் கூட இன்னமும் உத்வேகத்துடன் துணிச்சலோடு களத்தில் நின்று மக்கள் பணி செய்தார். ஓர் ஊடகவியலாளன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு, மாணிக்கவாசகத்தை தவிர, வேறு யாரையும் நாம் முன்னுதாரணமாக கொள்ள முடியவில்லை. அண்மையில் தான் வாழ்நாள் சாதனையாளராக இவர் கௌரவிக்கப்பட்டார். அந்த கௌரவம் சமூக அந்தஸ்தாக இருந்தாலும், அவர் அதனை பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை.

மேடைகளில் பொன்னாடைகளை போர்த்தி, பெருமை பேசிக்கொள்ளும் நம்மவர் மத்தியில், சமூகப் பணிக்கு என்ன சாதனையாளர் விருது என்ற எண்ணங்கொண்டவராகவே அவர் இருந்தார்.

ஊடகம் என்பது மக்களுக்காக செய்யும் ஜனநாயகப் பணி; அந்த உன்னத பணிக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த பெருமகனை இழந்துவிட்டோம். அவருடைய வாழ்க்கை அனுபவங்கள் வழிகாட்டல்கள் எதிர்கால ஊடகத்துறையினருக்கு உத்வேகத்தைக் கொடுக்கட்டும்.

அவரது பிரிவால் துயரத்திலிருக்கும் மனைவிக்கும் மகளுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# ஆக்ரா ஓயாவில் மீன்கள் இறந்த நிலையில் மிதப்பு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

கொத்மலை ஓயாவின் பிரதான கிளை ஆறான ஆக்ரா ஓயாவில் நேற்று (17) காலை அதிகளவான மீன்கள் திடீரென உயிரிழந்துள்ளதாக லிந்துலை அக்கரகந்த பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக்ரா ஓயாவிலுள்ள நீர் மாசடைந்துள்ளதாகவும், பல்வேறு கால்வாய்களிலிருந்து ஆக்ரா ஓயாவிற்குள் புகும் நீரில் பல்வேறு கழிவுகள் கலப்பதன் காரணமாக மீன்கள் இறந்திருக்கலாம் என தோட்ட தொழிலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். நேற்று காலை பெருந்தொகையான மீன்கள் இறந்த நிலையில் நீரில் மிதந்துள்ளன.

சிலர் இறந்த மீன்களை பிடித்து உணவுக்காக எடுத்துச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. ஆக்ரா ஓயாவின் நீர் மாதத்தில் ஒரு முறை கறுப்பு நிறத்தில் சாணம் கலந்த நீராக காணப்படுவதாக மலையக சுற்றாடல் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆக்ரா ஓயாவின் நீர் நேரடியாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் கலப்பதால் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வாழும் மீன்கள் மற்றும் ஏனைய நீர்வாழ் உயிரினங்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என மலையக சுற்றாடல் சங்கத்தின் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# இந்திய அரசாங்கத்தின் மனிதாபிமான உதவி

(வாஸ் கூஞ்ஞ)

இலங்கை மக்களுக்கு இந்திய அரசாங்கத்தின் மனிதாபிமான உதவியின் ஒரு பகுதியாக தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இந்திய துணைத் தூதரகம் வட மாகாணத்தில் உள்ள 500 குடும்பங்களுக்கு ஏப்பிரல் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் உலர் உணவுகளை விநியோகித்துள்ளது.

அதாவது ஏப்பரல் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 125 குடும்பங்களுக்கும் மன்னாரில் 100 குடும்பங்களுக்கும் ஏப்பிரல் 13 ஆம் தேதி கிளிநொச்சியில் 75 குடும்பங்களுக்கும் , வவுனியாவில் 100 குடும்பங்களுக்கும் . முல்லைத்தீவில் 100 குடும்பங்களுக்கும் இவ்உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட இவ் உலர் உணவுப் பொதிகளுக்காக ஈபிஆர்எல்எவ் கட்சியைச் சார்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவசக்தி அனந்தன் ஆகியோர் இந்திய அரசாங்கத்துக்கு நன்றியும் தெரிவித்துள்ளனர்.





# புனிதமான எமது தொழிலை அரசாங்கம் புதினமாகப் பார்க்கின்றது

## ஆசிரியர்கள் கவலை





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள் மடம் - அம்பிளாந்துறை ஓடத்துறையில் சேவையிலீடுபடும் படகுப்பததையில் கட்டணம் செலுத்தி தாம் பயணிக்க முடியாது என தெரிவித்ததையடுத்து திங்கட்கிழமை (17.02.2023) குறித்த பாதைப்போக்குவரத்து சுமார் 3 மணித்தியாலங்கள் குருக்கள்மடம் துறையில் தடைப்ட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. பாசாலையின் புதிய தவணைக்கான ஆர்பநாளான திங்கட்கிழமை குறித்த படகுப் பாதை ஊடாக போக்குவரத்துச் செய்யும் அதிகளவு அதிபர், ஆசிரியர்களும், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகஸ்த்தர்களும், காலை 7 மணி பாதை படுவாங்கரைப் பகுதிக்குப் புறப்படும் நேரத்திற்கு வழக்கமாகச் செல்வது போன்று குருக்கள்மடம் குறைக்குச் செய்யுள்ளனர். வழக்கம்போல் அனைவரும் அற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதையில் ஏறியுள்ளனர். அங்கிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் பற்றுச் சீட்டுக்களைக் கொடுத்து கட்டணம் செலுத்துமாறு தெரிவித்ததையடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாம் இதுவரை காலமும் இப்படகுப் பாதையூடாக எதுவித கட்டணங்களுமின்றியே பயணம் செய்து அதிகஷ்ற்றப் பிரதேசங்களுக்குச் மிகவும் தொலை தூரம் சென்று மாணவர்களுக்கு கல்வி புகட்டி வருகின்றோம் திடீரென எம்மிடம் நிதி வசூலிப்பது என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. என தெரிவித்ததையடுத்து. குறித்த பாதைப் போக்குவரத்து சேவையிலீடுபடாமல் காலை 9 மணிவரையில் தடைப்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்த அரச உத்த்தியோகஸ்த்தர்கள் தம்மால் கட்டணம் செலுத்தி இப்பாதையில் பணயம் செய்ய முடியாது என தெரிவித்து கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

10 வருடங்களைக் கடந்தும் மிக நீண்டதூரம் பணயம் செய்து அதி கஷ்ற்றப் பாடலை மாணவர்களுக்கு நாம் கல்வி புகட்டி வருகின்றோம். தற்போதைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில, எமக்கு அரசாங்கத்தால் மாதாந்தம் வழங்கப்படும் வேதனமே போதாது. எமது புனிதமான தொழிலை அரசாங்கம் புதினமாகப் பார்ப்பது எமக்கு கவலையளிக்கின்றது. எனவே இதுவரை காலமும் நடைமுறையிலிருந்ததுபோல் எதுவித கட்டணங்களுமின்றி நாம் பயணம் செய்து எமது சேவையைத் தொடர்வதற்கு சம்மந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும்.

சுமார் 5 வருடங்கள் அதி கஷ்ற்றப் பிரதேசங்களில் கடமையாற்றினால் நாங்கள் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியும். ஆனாலும் இற்றைவலையில் அவ்வாறு இடமாற்றம் பெறாமல் 10 வருடங்கள் கழிந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்களின் நலன்கருதி இதுவரையில் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காமல் சேவை செய்து வருகின்றோம். இந்நிலையில் நாம் பயணிக்கும் படகுப்பாதைக்கும் கட்டணம் அறவீடு செய்யதால் நாம் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல நேரிடும் இது தொடரிபில் எமது உயர் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம் என இதன் போது ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# இலங்கையில் முதல் முறையாக உலக சித்தர் நாள்



(ரக்ஸனா)

இலங்கையில் முதல் முறையாக உலக சித்தர் நாள் (சித்திரை 14 ) World Siddha day (April 14) முன்னிட்டு சித்த மருத்துவ விழிப்புணர்வு நிகழ்வு வந்தாறுமூலை இடம் பெற்றது.

உலக சித்தர்கள் நாள் என்பது சித்த மருத்துவத்தின் சிறப்பைப் போற்றும் வகையிலும், சித்த மருத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சித்த மருத்துவ அறிவியலை உருவாக்கிய சித்தர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் ராகுல் ஐயர் சித்த ஆயுள்வேத இயற்கை மருத்துவ மையத்தில் சித்த மருத்துவ விழிப்புணர்வு எனும் தொனிப்பொருளில் அதன் நிறுவனர் கலாநிதி நல்லசாமி பிரதீபன் ஐயர் தலைமை இடம்பெற்றது.

இன் நிகழ்வில் வைத்திய அத்தியச்சகர் M.S.M லாபிர் ஆயுர்வேத சித்த வைத்தியசாலை ஏறாவூர், வைத்தியர் கு. நிலோஜா மத்திய ஆயுர்வேத மருந்தகம் வந்தாறுமூலை ஆகியோர் கலந்து சித்த மருத்துவ விழிப்புணர்வு கருத்துக்களை தெரிவித்தனர்.

இன்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்கம் வந்தாறுமூலை மேற்கு தலைவர் அ.கந்தசாமி உட்பட சமுதாய நலன் சார்ந்து சிந்தனை கொண்டவர்கள் பலர் கலந்து கொண்டனர். வந்தாறுமூலை மேற்கு கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் அகில உலக இளம் சைவ மன்றம் எனபன இணைந்து ஏற்பாடு செய்தனர்.




Japan Pacific
marketing pvt ltd cycle
உதிரிபாகங்கள்,
cycle உதிரிபாகங்கள்,
முழுமையான cycle தொகையாக
விற்பனைக்கு உண்டு .
ஓட்டமாவடி,
வாழைச்சேனை
தொடர்புகளுக்கு
0777197004

சொல்லத் துடிக்குது மனசு: 10

# இறை நம்பிக்கையும் பக்தியும் கொண்ட குடும்ப வாழ்க்கை

*வீடு நலம்பெறக் காக்கும் ஆதிவைரவருக்கும்
நெடு வாழ்வுவாழ வழிசமைக்கும் மாரியம்மனுக்கும்
முடு கெனவே படையல் வைத்து வணங்கிடுவோம்*

மட்டக்களப்புச் சைவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை இயற்கையின்மீது அதித பக்தியும் ஈடுபாடும் கொண்டிருக்கின்றனர். அதன் வெளிப்பாடாக இயற்கையோடும் தமது வாழ்க்கையோடும் தொடர்புபட்ட தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். அதனை ஒரு பயபக்தியுடன் கலந்த உணர்வாகவும் வாழ்க்கையாகவும் கருதுகின்றனர். தமது வாழ்க்கை தோற்காமலும் நோய் நொடி துன்ப துயரங்கள் இல்லாமலும் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய செயற்பாடுகளைக் கைவிடாது தொடர்ந்து செய்து வருகின்றனர். முன்னைய கட்டுரையில் பல வீடுகளில் முக்கியத்துவம் கொடுத்து நடைபெறும் சர்க்கரை அமுது பற்றி விபரமாக எழுத முடிந்தது. இக்கட்டுரையில் சர்க்கரை அமுதைத் தொடர்ந்து நடைபெறும் ஆதிவைரவர் சடங்கு தண்ணீர் சோற்றுப் பள்ளயம் ஆகிய இரண்டும் பற்றி எழுத முனைகிறேன்.

பொதுவாக ஆலயங்களில் வைரவருக்கும், வீடுகளில் ஆதிவைரவருக்கும். வயல் மற்றும் சில கோயில்களல் நரசிங்க வைரவருக்கும் சுடலையில் சுடலை வைரவருக்கும் சடங்குகள் செய்வார்கள். ஆதிவைரவர் சடங்கு பெரும்பாலும் மட்டக்களப்பு சைவர்கள் மத்தியில் பிரபல்யமானது. குறித்த தினத்தில் பகல் சர்க்கரை அமுது கொடுத்து முடிந்ததம் அதே தினத்தில் மாலை வெளையில் ஆதிவைரவர் சடங்குக்கான வேலையை ஆரம்பித்து விடுவார்கள். இந்தச் சடங்கிலும்கூட ஊரிலிருந்து சிறியவர் முதல் பெரியவர் வரைப் பலரும் பங்கு கொள்வர். அதேபோல் சடங்குக்கான பூசைப் பொருட்களைத் தயார்படுத்துவதிலும் பலரும் பங்கு கொள்வர். இரவு வேளை என்பதனால் ஒளி ஊட்டுவதற்காகப் பெற்றோல்மாகஸ், கடல் இலாம்பினைப் பயன்படுத்துவர்.

பிற்பகல் வேளையில் பெண்கள் சிலர் அரிசிமா இடிக்கும் பணியில் ஈடுபடுவர். ஆண்களில் சிலர் வைரவர் பந்தலைப் புதுப்பித்தல் பந்தல் போடுதல் தென்னோலைப் பச்சைக் கிடுகு தயார்படுத்தல், குருத்தோலை மற்றும் வேப்பிலை கமுகம்பாளை கட்டுவர். பந்தலின் ஐந்து கால்களுக்கும் கமுகம்பாளை வேப்பிலை வைத்துக் கட்டுவர். இடது கால்களில் ஒருகால் பந்தலின் பின் பக்கத்தில் உள்ள இரு கால்களுக்கு மத்தியில் நடப்பட்டிருக்கும். அக்கால் பிரதானமான மையக் காலாகக் கொள்ளப்படும். இக்காலில் கமுகம் முழுப்பாளை ஒன்றும், வேப்பிலைகளும் இணைத்துக் கட்டப்படடிருக்கும். இதற்கு முன்னால் இழநீர் மற்றும் மடைகள் வைக்கப்படும். ஆதிவைரவர் பந்தல் எப்போதும் கிழக்கு வாசல் வீடாயின் சுவாமி அறைக்கு நேரே கிழக்குப்பக்க வேலிக்கு அருகாமையிலும் தெற்குவாசல்(குடில் நிலையம்) வீடாயின் வீட்டு நிலையத்தின் அக்கினி முலையிலும்(தென்கிழக்கு) மேற்குத் திசை நோக்கியவாறும் அமைக்கப்படடிருக்கும். பூசைப் பொருட்களைத் தயார்படுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுவர். மா இடித்து முடிந்ததும் உரொட்டி மா குழைப்பதற்குச் சுடுதண்ணீர் வைத்தல் அடுப்பு மூட்டுதல் மாவில் சுடுதண்ணீர் ஊற்றிப் பதமாகக் குழைத்தல் உரொட்டி சுடல் ஆகிய பணிகளில் அண்கள் சிலர் ஈடுபடுவர்.





சோலையூர்க் குருபரன்

ஓரிருவர் ஆதிலைரவர் பந்தலில் பூசைக்கு மடை வைக்கும் பணியில் ஈடுபடுவர். பாக்கு வெற்றிலை வாழை இலை கதளி மொந்தன் வாழைப்பழங்கள் பலாப் பழம் அன்னாசிப் பழம் கரும்பு தாமரைப்பூ ஏனைய பூக்கள் ஆகியவற்றை மஞ்சள் தண்ணீரில் கழுவி காம்பு வெட்ட வேண்டியவை துண்டுகளாக்கப்பட வேண்டிய பழங்கள் ஆகியவற்றை வெட்டி ஓலைப் பெட்டிகளில் வைப்பர். பந்தலின் மேற்பாகத்தில் குருத்தோலையினால் பின்னப்பட்ட கிடுகுகள் பரப்பப்பட்டிருக்கும். பந்தலில் நெய் விளக்கு ஏற்றியதும் ஓலைக் கிடுகுகளின் மேல் வாழை இலை விரிப்பர். பெரிய இளநிர் ஒன்றை திஃ்த்து அதனை மேலும் கீழும் தட்டையாக வெட்டிக் கழுவுவர். இதில் திருநீறு சந்தணம் மஞ்சள் குங்குமம் பூசி அதன் மேற்பாகத்தில் வாழை இலை இட்டு உரொட்டி ஒன்றின் மேல் பாக்கு வெற்றிலை மொந்தன் வாழைப் பழம் அன்னாசிப் பழத் துண்டு பலாப் பழத் துண்டு கமுகம் பாளையின் இதழ் தாமரைப்பூ ஆகியவற்றில் ஒவ்வென்று மஞ்சள் தடவி அனைத்தையும் வைப்பர்.

பந்தலில் பரப்பப்பட்ட வாழை இலையின் மேல் பிள்ளையார் ஆதிவைரவருக்கென இரு மடைகள் வைக்கப்படும். மஞ்சளில் களுவப்பட்ட வெற்றிலை பாக்கு வாழைப்பழம் ஆகியவற்றை ஒழுங்கு முறைப்படி வைப்பார்கள். அதன்மீது அன்னாசிப்பழத் துண்டுகள் பலாப்பழத் துண்டுகள் கரும்பு கமுகம்பாளை இதழ்கள் பூக்கள் தாமரைப் பூக்கள் ஆகியவற்றை மடையைச் சுற்றவரையும் மேலும் கீழுமாக அடுக்கி வைப்பார்கள். உரொட்டிகளை மூன்று மூன்றாக எடுத்து மஞ்சள் பூசி படையைச் சுற்றவரையும் அடுக்குவார்கள்.

இதற்கிடையில் வட்டாமடை ஒன்றும் வைப்பார்கள். அதில் வெற்றிலை பாக்கு வாழைப் பழம் அன்னாசி பலாப்பழத் துண்டுகள் கரும்பு தாமரைப்பூ பூக்கள் கமுகம் பூம்பாளை இதழ்கள் ஆகியவற்றை வைத்து அதன்மேல் மஞ்சள் பூசிய மூன்று உரொட்டியும் வைத்து விளக்கின் முன்னால் வைப்பார்கள். அதன்பின் பூசை ஆரம்பமாகும்.

ஆதிவைரவர் சடங்குகினைப் பூசாரி செய்வதாயின் இடைக்கிடையே மந்திர உச்சாடனமும் பஞ்சபுராணம் திருப்புகழ் பாடித் தூபம் தீபம் இஒஞ்ட;டீணீ காட்டித் தண்ணீர் தெளித்துப் பூசையை நிறைவு செய்வார். பூநூல் தரித்த ஐயராயின் ஆகம முறைப்படி செயது வேத ஆகம சுலோகங்களையும் கூறி புஸ்ப அர்ச்சனை தீப தூப ஆராதனை காட்டிப் பஞ்சபுராணம் திருப்புகழ் பாடுவித்து புஸ்பாஞ்சலி தர்ப்பணம் அர்ச்சதை போட்டு நீர்தெளித்து பூசையை நிறைவு செய்வார்கள். வீட்டுத் தலைவர் பூசை செய்வதாயின் கும்பிட்டுப் பஞ்சபுராணம் பாடிப் பக்தி சிரத்தையோடு பூசையை நிறைவு செய்வார்.



பக்தி சிரய்தையோடும் ஒற்றுமையோடும் செய்யப்படும் சடங்கு நிறைவுற்றதும் தண்ணீர் தெளித்து திருநீறு சந்தணம் கொடுத்து முடிந்ததும் வட்டா தடையை வீட்டுத் தலைவியிடம் கொடுப்பர். வீட்டுத் தலைவிஅதனைக் கொண்டு போய்ச் சுவாமி அறையில் சர்க்கரை அமுது கொடுப்பதற்கு வைக்கப்பட்ட நிறைகுடத்துக்கு (கும்பம்) முன்னால் வைப்பார். ஆதிவைரவருக்குரிய மடை பிரித்து வைக்கப்பட்ட மடைப் பெட்டியை வீட்டுத் தலைவரிடம் ஒப்படைப்பர். அவரும் அதனைக் கொண்டு போய்க் குழப்பத்தின் முன்னால் வைப்பார். பூசையினை வீட்டுத் தலைவர் செய்வதாயின் மூத்த மகன் அல்லது மகளிடம் மடைப் பெட்டி வழங்கப்படும்.

சகலருக்கும் திருநீறு சந்தணம் வழங்கப்பட்டதும் உரொட்டி வாழைப்பழம் ஏனைய பிரசாதங்கள் வழங்கப்படும். ஐயர் பூசாரிமாருக்குரிய தட்சணைகள் வழங்கப்பட்டதும் அதிகாலை நடைபெற வேண்டிய தண்ணீர்ச் தோற்றுப் பள்ளயத்துக்கான பணிகள் ஆரம்பமாகும்.

அதிகாலை மூன்று மணிக்கு முன்னர் புதுப் பானையில் வெள்ளை அரிசிச் சோறு சமைப்பார்கள். அதனை அடுப்பில் இருந்து இறக்கி சின்ன வெங்காயத்தினை அரிந்து துண்டுகளாக்கிச் தோற்றுப் பானையில் இட்டு மூடி வைப்பார்கள். முயல் நாள் உறைபோட்டு வைத்திருந்த பசுத்தயிர் தயாராகி இருக்கும். சீனி போட்டு அரசிமாக் கூள் துள்ளுமா ஆகியனவும் தயாரிப்பாளர்கள்.

மந்தையில் நாளில் வருகை தந்த மூன்று பெண் பிள்ளைகளையும் அழைத்து வந்து மூன்று பிள்ளைகளுக்கும் உரிய கடமைகளைச் செய்து மூவரையும் குப்பத்துக்கு அருகில் வெள்ளை விரித்த பாயில் முறைப்படி இருத்துவர். இடமிருந்து வலமாக முதலாவது பெண் துர்க்கையம்மனாகவும் இரண்டாவது பெண் மாரியம்மனாகவும் மூன்றாவது பெண் பேச்சியம்மனாகவும் மடை வைப்பார்கள். இன்றைய தினம் பொதுமடை மூன்று அம்மன்களுக்கும் என நான்கு மடைகள் வைக்கப்படும். வெற்றிலை. பாக்கு வாழைப் பழம். பூக்கள் தாமரைப்பூ கரும்பு அன்னாசிப்பழத் துண்டுகள் பலாப்பழத் துண்டுகள் ஆகியன மடைகளில் வைக்கப்படும். படையலில் வெங்காயம் கலந்த தண்ணீர்ச் சோறு பலகார வகைகள் அரிசிமாக் கூள் தயிர் சீனி துள்ளுமா ஆகியனவும் வைக்கப்படும்.

உரிய முறைப்படி பூசை செய்பவரின் ஒழுங்கின்படி பூசை நிறைவுற்றதும் வீட்டுத் தலைவி மூன்று தெய்வங்களிடமும் வாக்குக் கேட்டு மடிப்பிச்சை வாங்குவார். அதன் பின்னர் வீட்டுத் தலைவி மூவரிடமும் மூன்று பிடி அமுதெடுத்து உண்ணுமாறு கோருவார். உண்டு முடிந்ததும் பிள்ளைகள் மூவரினதும் கையைக் களுவி அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைப்பர். தண்ணீர் தெளித்து மடைபிரித்து வீட்டுத் தலைவன அல்லது தலைவியிடம் மடைப்பெட்டி வழங்கப்படும். வந்திருக்கும் உறவினர் ஊரவர்களை வரிசையில் இருக்கச் செய்து திருநீறு சந்தணம் அமுது பிரசாதம் கொடுத்து அனுப்பி வைப்பர்.

இவ்வாறு ஊர் ஒற்றுமைக்கு ஆதாரமான சர்க்கரை அமுது ஆதிவைரவர் சடங்கு தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயம் ஆகியன நடைபெற்றன. நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இவை இடத்துக்கு இடம் பிரதேசத்துக்குப் பிரதேசம் சிறிய வேறுபாடுகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்மூலம் ஊர் ஒற்றுமை தூய்மையான பக்தி அர்ப்பணிப்பு ஈடுபாடு ஆகியன வெளிப்படுத்தப்பட்டன.

*‘எம்முடன் வாழ்ந்து
எமைப் பிரிந்து விண்ணுலகு சென்ற
பிதிரர்களுக்குப்
பிதிர்கடன் செய்வோம்’*

# 13 வது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்ல முடியாமல் இருப்பதே நமது அரசியல் யதார்த்தமாகும்

## திருகோணமலை கருத்தரங்கில் அரசியல் ஆய்வாளர் யதீந்திரா.!





**(அ . அச்சுதன்)**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13வது திருத்தச்சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமை ஒன்றுதான் தமிழ் மக்களுக்கிருக்கும் ஒரேயொரு சாதகமான விடயமாகும். இதனை தாண்டிச் சொல்லப் போவதாக பலர் கூறினாலும் கூட, 2009இற்கு பின்னரான கடந்த 13வருடங்களாக அதனை எந்தவொரு அரசியல் கட்சியும் நிரூபிக்கவில்லை.

இந்த பின்புலத்தில் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாகாண சபை முறைமை ஒன்றுதான் நமக்கு எஞ்சியிருக்கின்றது. இதனை நாம் புத்திசாலித்தனமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதிலுள்ள ஒரேயொரு வாய்ப்பான பக்கம், இந்தியா இதனை தொடர்ந்தும் வலியுறுத்திவருவதுதான். இந்தியாவின் ஆதரவு ஒன்றுதான் நமக்கு சாதகமான விடயமாகும். இந்தியா தொடர்ந்தும் இந்த விடயத்தில் எங்களோடு நிற்கும்.

இதனை தமிழ் அரசியல் தலைமைகளும் புரிந்துகொள்ள வேண்டும், மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

திருகோணமலை செயலரங்கத்தின் (அக்ட்) ஏற்பாட்டில், 15.04.2023 அன்று, 13வது திருத்தச்சட்டத்தை விளங்கிக்கொள்வோம் என்னும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கின் போது, அரசியல் ஆய்வாளர் யதீந்திரா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இந்த நிகழ்வில், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரான, அண்ணாமலை வரதராஜப்பெருமாளின் செயலாளராக இருந்தவரான கலாநிதி. விக்கினேஸ்வரன், 13வது திருத்தச்சடத்திலுள்ள சாதகமான அம்சங்கள் பற்றி விரிவான உரையொன்றை ஆற்றியிருந்தார். 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆர்வமில்லை. அதே வேளை அதனை பயனுடைதாக்க வேண்டுமென்பதில் தமிழ் தலைமைகளும் ஒரு கொள்கையுடன் செயலாற்றவில்லை. இதன் காரணமாகவே இந்த விடயம் தொடர்ந்தும் பேசு பொருளாக இருக்கின்றது. எனினும் தற்போது இதனை அமுல்படுத்துவதற்கான சாதகமான சூழல் காணப்படுகின்றது. இதனையும் நாம் தவற விடுவோமாயின் அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதுவும் இருக்கப் போவதில்லை என்றார் .

# வரலாற்றில் முதல் தடவையாக ஆசிரியர்களுக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி














**(ரக்ஸனா)**

வழக்கமாக பாடசாலை மட்டத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறுவது நடைமுறையாக அமைந்துள்ளது. இந்நிலையில் வரலாற்றில் முதன் முறையாக மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடையே விளையாட்டுப் போட்டியொன்று நடைபெற்றது.

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக புதிதாக பதவியேற்றுள்ள சி.சிறிதரன் அவர்களின் தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையில் அவ்வலயத்திலுள்ள அனைத்து அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கும், பல துறைசார் பயிற்சிகளை அவ்வப்போது வழங்கி வரும் இந்நிலையில் அதன் மற்றுமொரு அங்கமாக அதிபர்கள் ஆசிரியர்களிடையேயும் மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் போன்று அதிபர் ஆசிரியர்களுக்குமிடையே விளையாட்டுப் போட்டி நிகழ்வொன்று புதன்கிழமை (12.04.2023) மாலை களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி. எம்.கோபாரரெத்தினம், அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்ததுடன், மேலும், ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன், களுதாவளை ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ்.மயுரேஷேன், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டம், மற்றும் போரதீவுப் பற்றுக் கோட்டம், ஆகியவற்றிலுள்ள ஆசிரியர்களிடையே வேண்ட் வாத்தியம், கிரிக்கட், காற்பந்து, கரப்பந்து, நூறுமீற்றர், நானூறு மீற்றர், மற்றும் பரதநாட்டியம், உள்ளிட்ட கலை நிகழ்வுகளும், நடந்தேறியதோடு, வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்கு பதக்கங்களும், வெற்றிக் கேடயங்களும், அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

# 130 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம்





**(க.கிஷாந்தன்)**

அட்டன் - அபோஸ்ட்லி தோட்டத்தின் கௌனிவத்த பிரதேசத்தில் வாழும் 130 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் லிவிங் வோட்டர் எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

இப்பகுதியில் வாழும் மக்கள் சுத்தமான குடிநீரை பெறுவதில் கடந்த 40 வருடங்களாக பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர். விவசாயத்துக்கென அமைக்கப்பட்டிருந்த சிறு கிணறுகளில் இருந்தே நீரை பெற்று வந்தனர். அது சுத்தமான குடிநீராக அமையவில்லை. வேறு வழி இல்லாததால் அதன் ஊடாகவே நீர்த்தேவையை பூர்த்தி செய்து வந்துள்ளனர்.

இந்நிலையிலேயே அம்மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் நோக்கில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு, தற்போது வெற்றிகரமாக குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக 1.5. மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தாம் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினை குறித்து பிரதேச சபை மற்றும் அரசியல்வாதிகளிடம் பல தடவைகள் முறையிட்டு மக்களுக்கு தீர்வு கிட்டவில்லை.

இந்நிலையில் மனித உரிமை செயற்பாட்டாளர் கலாநிதி யோகான் பெரேராவின் தலையீட்டையடுத்து, நீர் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் மயப்படுத்தும் நிகழ்வில் கலாநிதி யோகான் பெரேரா, மதத்தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

# கல்முனை பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் அருட் சகோ. சந்தியாகு சேபமாலை விடைபெறுகிறார்!

கிழக்கில் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் அருட் சகோ. சந்தியாகு செபமாலை இன்று (18) செவ்வாய்க்கிழமை கல்முனையில் இருந்து விடைபெறுகிறார்.

அதனையொட்டி கல்முனை கல்விச் சமூகம் பழைய மாணவர் சங்கம் பழைய ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பற்றிமா அபிமானிகள் என்று பலதரப்பினரும் அவரை தினமும் அழைத்து சேவைகளைப் பாராட்டி வருகின்றனர்.

இன்று (18) செவ்வாய்க்கிழமை கல்லூரி ஆசிரியர்கள் அவருக்கு மாபெரும் பிரியாவிடை வைபவம் கல்லூரியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

நாளை (19) புதன்கிழமை கல்முனையில் இருந்து ஆசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் அவரை மன்னாருக்கு கொண்டு சென்று விட உள்ளனர்.

ஐந்து வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இந்த பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்று பல சேவைகளை புரிந்து விட்டு பாடசாலையை ஒரு உன்னதமான உயர்நிலைக்கு இட்டுச்சென்று இன்று இடமாற்றம் பெற்று மன்னார் புனித சேவியர் ஆண்கள் பாடசாலைக்கு அதிபராக செல்ல இருக்கின்றார்.

இவர் 30.08.2017இல் பற்றிமா அதிபராக பதவியேற்று இன்று (18.04.2023) இடமாற்றம் பெற்று சொந்த இடமான மன்னார் செல்கிறார்.

இவரது இடத்திற்கு மன்னார் புனித சேவியர் ஆண்கள் பாடசாலை அதிபர் அருட் சகோ. எஸ்.இ.றெஜினோல்ட் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 21ஆம் திகதி பற்றிமா அதிபராக பதவி ஏற்கவிருக்கிறார்.

நூற்றாண்டுகளை கடந்துவிட்ட பாடசாலை புனித சூசையப்பர் சபை, அன்புச் சகோதரர் சபை, கார்மேல் கன்னியர் சபை என பல கத்தோலிக்க சபைகளின் அருட் சகோதரர்களாலும், அருட்சகோதரிகளாலும் வழி நடத்தப்பட்ட பாடசாலை அருட் சகோதரர் மத்தியூ போன்ற புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒருவர் அருட் சகோதரர் சந்தியாகு ஆவார்.

மிகவும் இக்கட்டான ஒரு சூழலில் பாடசாலைக்கு மிகச் சிறந்த ஒரு அதிபர் தேவைப்பட்ட வேளையில் பாடசாலை சமூகத்தின் வேண்டுதலின் பெயரில் புனித டிலாசால் சபை பாடசாலையை பொறுப்பெடுத்தது. அதன் முதலாவது அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு அவர்கள். அவருடைய வருகையினால் பாடசாலையின் முகாமைத்துவம்




கல்வி பாடவிதானம், இணைப்பாடவிதானம்,, பௌதிகள அபிவிருத்தி என அனைத்திலும் பெரு வளர்ச்சியை அடைந்தது.

கம்பீரமான தோற்றம், கூர்மையான கண்கள், கனிவான பார்வை. புன்முறுவல் பூத்த முகம், பல் மொழி ஆற்றல், அனைவரையும் அரவணைக்கும் பண்பு, வெளிப்படைத்தன்மை, அதிபர் என்ற நிலையில் இருந்து இறங்கி அனைவருடனும் பழகும் பண்புஆசிரியர்கள் மாணவர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் என் அனைவரையும் கட்டி போட்டது, அனைவரும் வேற்றுமை கடந்து அவர் பின் ஒன்றிணைந்தனர் இது அவரது முகாமைத்துவத்தின் வெற்றி. வேலை பகிர்ந்தளிப்பும், ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் பாடசாலை நாட்காட்டியும் (school calender) இதனை காட்டும்.

பாடசாலை கல்வித்துறைகளும் பெரு வளர்ச்சி கண்டது அதிபருடைய ஐந்து



வருடங்களில் இரண்டு வருடங்களை கொரோனா தின்றது எனினும் மாணவர்கள் வீட்டில் இருந்து கற்கும் வகையில் வகுப்பு ரீதியாக பாட ரீதியாக தீடச்ஞண்ச்ணீணீ குழுக்கள் அமைக்கப்பட்டமை, த்ணிணிட் வகுப்புகள் ணிணடுடிணனு பரிட்சைகள் என தொடர்ச்சியாக நடத்தி கிழக்கு மாகாணத்திலேயே முன்னுதாரணமான ஒரு பாடசாலையாக இப் பாடசாலை திகழ்ந்தது அதனால் தான் ஒவ்வொரு வருடமும் தலா எட்டு எட்டுக்கு மேற்பட்ட மாணவர்கள் வைத்தியர்களாக எந்திரிகளாக பல்கலைக்கழகம் சென்றனர், க பொ த சாதாரண தரப் பரீட்சையில் வரலாற்றில் முதல் தடவையாக 32 மாணவர்கள் 9அ சித்தி பெற்று சாதனை படைத்தனர், புலமை பரிசில் பரீட்சையில் 225 மாணவர்கள் பரிட்சை எடுத்து அதில்217 மாணவர்கள்70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். ஒவ்வொரு வருடமும் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் புலமைப் பரீட்சை பரீட்சையில் சித்தி பெற்றனர். இது அதிபரின் காலத்து கல்விச் சாதனை.

இணை பாடவிதானத்தை பார்க்கும் பொழுது தமிழ் மொழி தினம் ஆங்கில மொழி தினம் சமூக விஞ்ஞான போட்டிகள் அனைத்திலும் பாடசாலை முன்னிற்க்கிறது. குறிப்பாக பாடசாலையில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகள். கொழும்பு நகர பாடசாலைகளையும் வென்றுவிட்டது. புதிதாக உதைப்பந்தாட்ட குழுக்கள்,வலைப்பந்தாட்ட குழுக்கள், கூடை பந்தாட்ட குழுக்கள், கடின பந்து கிரிக்கெட், பல துறை சார்ந்த விளையாட்டு பயிற்சிகள், எறிபந்து போட்டியில் தேசியம்வரை சென்று சாதித்தமை குறிப்பிடத்தக்கது

மாணவர்களிடத்தில் சாரணர் குழு, கடேட் குழு, சென் ஜோன்ஸ் ஆம்புலன்ஸ் குழு, சுற்றாடல் கழகம் என்ன புதிய கலகங்கள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பாக சுற்றாடல் கழக மாணவர்கள் 5 பேர் ஜனாதிபதி விருது பெற்றமை, மாணவர்களது புத்தாக்க செயற்பாடுகள் இணை பாடவிதான சாதனைகளை காட்டும்.

பாடசாலையின் பகுதிகவள அபிவிருத்தியை நோக்கு கையில் முன்னர் பாலைவனம்போல் காட்சியளித்த பாடசாலை இன்று சோலைவனமாக காட்சியளிக்கின்றது. எங்கு பார்த்தாலும் பூ மரங்கள் கண்ணைக் கவரும் மரங்கள் கற்பதற்கான ஒரு இனிய சூழலை இந்த அழகு படுத்தல் ஏற்படுத்தியுள்ளது. நேர்த்தியாக கட்டப்பட்டுள்ள நிர்வாகக் கட்டிடம், ஆண்கள் பெண்கள் பகுதி மாணவர்களுக்கான சைக்கிள் தரிப்பிடம், டெக்னாலஜி மாணவர்களுக்கான பயிற்சி கூடம், ஆடியோ விஷுவல் ரூம், கிளனி மண்டப புனரமைப்பு, சிசிலியா மேரி அரங்கு புனரமைப்பு, மைதானப்புனமைப்பு, பெண்கள் பகுதி பாடசாலை பேர் பலகை, ஆண்கள் பகுதியில் டிஜிட்டல் நேம் போர்டு, ஆண்கள் பகுதி பெண்கள் பகுதி மற்றும் மைதானத்திற்கான மின்விளக்கு ஒளியூட்டல், மாணவர்கள் கற்பதற்கான ஸ்மார்ட் வகுப்பறைகள், ஒரு கோடிக்கு மேற்பட்ட செலவில் செய்யப்பட்ட பாடசாலை ரிப்பேரிங் வேலைகள் குடைப்பந்தாட்ட திடல் காங்கிரீட் இட பட்டமை காப்பட் போடப்பட்டமை, சூட்டிங் போர்டு, ஸ்கோர் போர்டு என செய்யப்பட்ட புனரமைப்பு வேலைகள் கட்டட வேலைகள் ஏராளம் அதிபருடைய காலத்தில் பாடசாலையில் நடந்த விழாக்கள் ஏராளம் விழாக்களுக்கு வருகை தந்த உயர் அதிகாரிகள் மூலம் பாடசாலைக்கு அவரால் பெற்றுத் தரப்பட்ட உதவிகளும் ஏராளம் எங்கும் முன்சென்று கதைத்து பாடசாலைக்கு பாடசாலைக்குரிய தேவைகளை பூர்த்தி செய்கின்ற வல்லமை சந்தியாகு அதிபரிடம் காணப்பட்டது இதற்கு அவரது மொழி ஆளுமையும் துணை நின்றது.


உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

அதிபருடைய வெளிப்படை தன்மை அன்பான அரவணைப்பு பழைய மாணவர்களை ஒன்றிணைத்தது முதன்முதலாக பழைய மாணவர்கள் அனைவரையும் அவர்களது குடும்பங்களையும் ஒன்றிணைத்த ஒரு இரா போசன விருந்து பாடசாலையில் இடம் பெற்றது. பழைய மாணவர் சங்கம் இலங்கையில் மட்டுமின்றி இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா என எங்கும் வியாபித்து உலகப் பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றிணைப்புடன் பாடசாலை கல்வியிலும் பௌதீக வளத்திலும் அபிவிருத்தி காணத் தொடங்கியது. அவருடைய காலத்தில் பாடசாலை பெற்ற வளர்ச்சி ஏராளம். கார்மேல் பற்றிமா கல்லூரியின் ஒரு நவயுக சிற்பி என்று இவரை குறிப்பிடலாம்.

இவ்வாறு பலரும் புகழாரம் சூட்டினார்கள்.



# வக்பு சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்க சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## சாய்ந்தமருதில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்







(செயிட் அஸ்லம்)

முஸ்லிம் சமூகத்தில் வசதி படைத்தவர்களினால் தமது மரண ஈடேற்றத்திற்காக சமூகம் நோக்கம் கருதி அன்பளிப்பு செய்யப்படுகின்ற சில வக்பு சொத்துக்கள் சரியான பரிபாலனம் இல்லாமல், சீரழிக்கப்படுவதும் தவறாக பயன்படுத்தப்படுவதும் கவலைக்குரிய விடயமாகும். ஆகையினால் வக்பு சொத்துக்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மெற்றோ பொலிட்டன் கல்லூரி ஒழுங்கு செய்திருந்த வருடாந்த இப்தார் வைபவம், மர்ஹூம் ஹஸ்ரத் யூ.எல்.எம்.காஸிம் மௌலவி தொடர்பான நினைவேந்தல் மற்றும் விஷேட துஆப் பிராத்தனை நிகழ்வுகள் கல்லூரியின் ஸ்தாபகத் தவிசாளரும் கல்முனை மாநகர முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (16) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில்;

சாய்ந்தமருது பிரதேசத்தின் மூத்த உலமாவாகத் திகழ்ந்த சன்மார்க்க அறிஞர் யூ.எல். எம்.காஸிம் மௌலவி அவர்கள் அண்மையில் காலமான செய்தி எம் எல்லோருக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி, அரவணைக்கின்ற சிறந்த பண்பாளராக அவர் காணப்பட்டார்.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மரைக்காயராக, நம்பிக்கையாளர் சபையின் பிரதித் தலைவராக பைத்துஸ் ஸகாத் நிதியத்தின் தலைவராக, சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய அறபுக் கலாபீடத்தின் தலைவராக, உலமா சபையின் செயலாளராக, தலைவராக, பாடசாலை ஆசிரியராக, பிரதி அதிபராக என்று சுமார் 04 தசாப்த காலம் இப்பிரதேசத்தின் முக்கிய ஆளுமையாக இருந்து மிகுந்த அர்ப்பணிப்புடன் அவர் சேவையாற்றியிருக்கிறார்.

அன்னாரை நினைவுகூர்கின்ற இச்சந்தர்ப்பத்தில் அன்னார் மார்க்கக் கல்வி கற்ற மஹரகம கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துக்கள் இன்று சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டிருப்பது குறித்து கவலையோடு பிரஸ்தாபித்து, பேச வேண்டியிருக்கிறது. இது ஒரு சமூகப் பிரச்சினையாக கருதப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும்.

இந்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்கள் மத்தியில் ஏராளமான வசதி படைத்தவர்கள், பரோபகாரிகள் தம்முடைய மரண ஈடேற்றத்திற்காக மனவுவந்து வக்பு சொத்தாக விட்டுச் சென்றிருக்கின்ற பல சொத்துக்களை சரியான பரிபாலனம் இல்லாமல், சீரழிந்து போக, தவறாக பயன்படுத்தப்படுகின்ற நிகழ்வுகள் ஏராளமாக நடந்து கொண்டிருக்கின்றன.

அண்மைக்காலமாக பேசப்படுகின்ற இந்த கபூரியா அரபுக் கல்லூரியின் வக்பு சொத்துக்கள் மர்ஹூம் எம்.கே.எச். அப்துல் கபூர் எனப்படுகின்ற கொழும்பின் பெரும் கோடீஸ்வர வர்த்தகரினால் அன்பளிப்பு செய்யப்பட்டவையாகும். அவற்றுள் மிக முக்கியமான சொத்து மஹரகம பகுதியில் 17.5 ஏக்கர் காணியை இக்கல்லூரிக்கென வழங்கியிருப்பதுடன் தலைநகரில் அமைந்துள்ள சுலைமான் வைத்தியசாலையையும் கிராண்ட்பாஸ் பகுதியில் இரண்டரை ஏக்கர் காணியையும் கல்லூரியின் பரிபாலனத்திற்காக அவர் வக்பு செய்திருந்தார்.

ஆனால் இந்த வக்பு சொத்துக்கள் இன்று மர்ஹூம் அப்துல் கபூர் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் இடையில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டு, நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் வக்பு செய்தவரின் நோக்கத்திற்கு மாறான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தவிர்த்து, இதனை சுமூகமாக தீர்ப்பதற்குரிய சில சட்டத்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கூடிய அவதானம் செலுத்தி, ஆலோசித்து வருகின்றோம்- என்று ரவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டார்.

# அரைகுறையாக கிடக்கும் உள்ளக விளையாட்டரங்கை பார்வையிட்ட அமைச்சரும் செயலாளரும்!





(வி.ரி.சகாாதேவராஜா)

காரைதீவு விளையாட்டு கழகம் நிருமாணித்து அரைகுறையாக கிடக்கும் உள்ளக விளையாட்டரங்கை, கிராமிய வீதி அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேஷன் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

கழகத்தின் அழைப்பை ஏற்று புத்தாண்டன்று காரைதீவில் இடம் பெற்ற புத்தாண்டு விளையாட்டு விழாவிற்கு வருகை தந்த இருவரும், நிதியின்மை காரணமாக அரைகுறையில் கிடக்கும் உள்ளக விளையாட்டரங்கை பார்வையிட்டனர்.

இதன்போது கழகத் தலைவர் ரி.தவக்குமார் கழகப் போஷகர்களான சிவ.ஜெகராஜன், வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் விளையாட்டரங்கு தொடர்பான பூரண விவரங்களை வழங்கினார்கள்.

இதனை நிறைவுறுத்த முப்பது மில்லியன் ரூபாய் தேவையாகின்றது என்றும் குறிப்பிடப்பட்டது.

இதிலே ஒரு பகுதியையாவது முதலில் செய்து தர வேண்டும் என்று கழகத்தினர் கோரிக்கை விடுத்தனர். அந்த கட்டடத்தை பார்வையிட்ட அவர்கள் முதலில் கூரை அமைப்பதற்கும் அருகில் வீதி அமைப்பதற்கும் முயற்சி செய்வதாக கூறிச் சென்றார்கள்.

# பல நோக்கு கூட்டுறவுச் சங்க எரிபோருள் நிலையத் திறப்பு விழா





(எம்.ஏ.றமீஸ்)

நிந்தவூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழா நேற்று (17) சங்கத்தின் தலைவர் ஏ. சஹீத் அஹமட் தலைமையில் இடம்பெற்றது.

நவீன மயப்படுத்தப்பட்ட இவ் எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழாவிற்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி.பைஷல் காசிம் மற்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.சிவலிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு எரிபொருள் நிலையத்தினை திறந்து வைத்தனர்.

இதன்போது புதிதாக திறந்து வைக்கப்பட்ட எரிபொருள் நிலையத்தின் மூலம் நிந்தவூர் பிரதேச விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கு சிறந்த சேவையினை முன்னெடுப்பது தொடர்பில் விஷேட கருத்துரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வின்போது நீண்ட காலமாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஜப்பாரின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், நிகழ்வின் அதிதிகளும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

நிந்தவூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றி மரணித்தவர்களின் ஈடேற்றம் வேண்டி இதன்போது விஷேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன், அவர்களின் கடந்த கால சேவைகள் தொடர்பிலும் இதன்போது நினைவு படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக பிரிவில் உள்ள 12 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் ஐந்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருகின்ற நிலையில் இப்பிராந்தியத்தில் ஆறாவது எரிபொருள் நிரப்பு நிலையமாக இவ் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை, கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம்.பரீட், எம்.சி. ஜலால்டீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.ஜப்பார், ஐ.எம். நியாஸ், எஸ்.ஜாபீர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.


# சித்திரைப்புது வருடம் இலங்கையில் எமது இந்து மத தமிழர்களே கொண்டாடினர்..!

★ 1505, ம் ஆண்டு தொடக்கம் 1658, வரை போத்துக்கேயர் காலத்திலும்..
★ 1658, தொடக்கம் 1786, வரை ஒல்லாந்தர் காலத்திலும்
★ 1786, தொடக்கம் 1948, வரை பிரித்தானியர் காலத்திலும்.

இந்து மத புத்தாண்டாகவே தமிழ் மக்கள் இலங்கையில் தொடர்ச்சியாக கடைப்பிடித்தனர்..!
ஆனால்.

★ 1948, பெப்ரவரி,04, ல் பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரமடைந்ததாக கூறப்பட்ட பின்னரே..
★1948, ஏப்ரல்,14, (சித்திரை-1) தொடக்கம் அதை சிங்கவர்களின் திருநாளாகவும் இணைத்து தமிழ் சிங்கள சித்திரை வருடமாக கொண்டாடப்பட்டு வருகிறது..!
★ 1947, கலண்டரில் இந்து புதுவருடம் (Hindu New Year) என குறிப்பிடப்பட்டுள்ளதை இதில் காணலாம்.
★இந்த வரலாற்று உண்மைகளை இன்றைய தமிழ் இளைஞர்கள் அறியவேண்டும் என்பதற்காக இதனை பதிவிடுகிறேன்.!
★தமிழர்கள் என்பதை இந்துக்களாக அடையாளப்படுத்தப்பட்டமையால் 1948, க்கு பின்னர் இந்து என்பதை நீக்கி தமிழர்கள் என மாற்றப்பட்டு தமிழ் சிங்கள புதுவருடமாக அடையாளப்படுத்தப்பட்டது..
। வரலாறுகள் மறைக்கவோ மறுக்கவோ கூடாது..!

-பா.அரியநேத்திரன்-15/04/2023-



appears in the ... it is again visible for a greater part of the ... compass declination ... 3.20W i.e.

Magnetism.—The estimated mean value of the compass variation at Colombo in 1947 may be taken as approximately 3.20W i.e. the compass zero is west of true north by this amount.

**Public and Bank Holidays in 1947**

(Subject to alteration by H. E. the Governor).

| | | |
|---|---|---|
| JANUARY | 1 and 2 ... | New Year—Public and Bank holidays. |
| JANUARY | 14 ... | Tamil Thai Ponga[l]—P[u]blic and Bank holiday. |
| FEBRUARY | 4 ... | Prophet Mohamed's Bi[rth]day—Public and Bank holiday. |
| APRIL | 3 to 7 ... | Easter—Public and Bank holidays. |
| APRIL | 14 ... | Hindu New Year's Day—Public and Bank holiday. |
| MAY | 5 and 6 ... | Buddhist Vesak (May 4th being Sunday)—Public and Bank holidays. |
| JUNE | 2 ... | Buddhist Poson—Public and Bank holiday. |
| JUNE | 12 ... | Public and Bank holiday on account of King's Birthday. |
| JULY | 1 ... | Bank holiday only. |
| AUGUST | 1 and 2 ... | Hindu Vel Festival—Bank holidays only. |
| AUGUST | 16 ... | Adi New Moon Day—Public holiday only. |
| AUGUST | 18 ... | Ramazan Festival—Public and Bank holiday. |
| OCTOBER | 25 ... | Muslim Hadji Festival—Public and Bank holiday |
| NOVEMBER | 11 ... | Hindu Dipawali Festival—Bank holiday only. |
| DECEMBER | 24 to 27 ... | Christmas, etc.—Public and Bank holidays. |
| DECEMBER | 28 to 31 ... | Christmas, etc.—Public holidays only. |

The dates of the holidays of the Ceylonese Festivals are approximate only; they will be notified in due course in the Government Gazette.

POST OFFICE HOLIDA[YS]

Good Friday, Hindu New Year Day, Buddhist Vesak Day (1st day of the two public holidays) the King's Birthday, Christmas Day and the day following and all Sundays.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

# கதிர்காமத்தில் சோழர்கால ஆலயம் கண்டுபிடிப்பு!









## புனரமைக்க சித்தர்கள் குரல் சங்கர் ஜி ஏற்பாடு!



சோழர்காலத்தில் நிருமாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் பிள்ளையார் ஆலயம் ஒன்று கதிர்காமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் திஸ்ஸ பகுதியில் தஞ்சை நகரம் என்ற இடத்தில் இந்த ஆலயம் பாழடைந்த நிலையில் காணப்பட்டது. கூரைகள் இறந்து விழும் நிலையில் இருந்துது. மூலவிக்கிரகம் அகற்றப்பட்டு வெறும் பீடம் மட்டுமே காணப்பட்டது.

அங்கு சித்தர்கள் குரல் அமைப்பினர் அதன் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் நேற்று முன்தினம் (16) ஞாயிற்றுக்கிழமை அங்கு விஜயம் செய்தனர்.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் இவ்வாலய நிலையை நேரிலறிந்து திருமலை பிரபல ஆசிரியர் பிரகாஷ் மூலமாக சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியிடம் தெரிவிக்கப்பட்டது.

அகில உலக மகா சித்தர்கள் அறக்கட்டளை சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான ஆலோசகரும் வாரணாசி பெலாரஸ் இந்து பல்கலைக்கழகத்தின் சித்தவித்யா கீர்த்தி வேதிக்பண்டிற் ஶ்ரீலஶ்ரீ சிவசங்கர் குருஜி தலைமையில் சித்தர்கள் குரல்அமைப்பினர் அங்கு விஜயம் செய்து ஆலயத்தை பார்வையிட்டு ஆலய உரிமையாளர் விஸ்வநாதன் பராமரிப்பாளர் சிவகுமார் குடும்பத்துடன் கலந்துரையாடினர்.அதன் போது ஆலயத்தை புனரமைத்து தருமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அதனையடுத்து சித்தர்கள் அங்கு மடை வைத்து விடைகேட்டு முன்னால் இருமணி நேர சிறப்பு யாகத்தை நடாத்தினர். அதன் போது சூழவுள்ள தமிழ் சிங்கள மக்களும் இணைந்து கொண்டனர்.

யாகத்தில் சித்தர்கள் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜி நடாத்த சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் ,உப தலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா, தியாகராஜா, சிங்கப்பூர் டாக்டர் பி.மகேஸ்வரன், வீரமுனை கஸ்தூரன், மற்றும் கிஷோர் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆலயத்தை புனரமைத்து உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமென சிவசங்கர் ஜி அங்கு தெரிவித்தார்.

அங்கு ஆலய தலைவர் விஸ்வநாதன் கூறுகையில்..

கதிர்காமத்திலிருந்து அம்பாந்தோட்ட செல்லும் பிரதான வீதியில் அமைந்த திஸ்சமஹாராமவில் அமைந்த புராதனமான சைவத்தமிழ்க் கிராமம் 'தஞ்சை நகரம்' என்று தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வருகிறது.

அங்கு மன்னராட்சிக் காலத்தில் பெருநகராக விளங்கிய இக்கிராமம் இன்றும் 'தஞ்சை நகரம்' என்றே அழைக்கப்படுகிறது. தஞ்சை நகரத்தில், பிரதான வீதியை மிக அண்மித்து, பிரதான வீதியை நோக்கியவாறு அமைந்திருப்பதுதான், யாத்திரிகர்களுக்கும் தன்னை நாடுவோருக்கும் ஞானம் வழங்கும் 'குளவிப் பிள்ளையார்' ஆலயம்.

கதிர்காம யாத்திரிகர்கள் இந்த ஆலயத்தைக் கடந்து செல்லும்போது இப்பிள்ளையாரின் அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும் என்ற மரபு காலங்காலமாகப் போற்றப்பட்டு வருகிறது.

யாத்திரைக்குத் தகுதி அற்றவர்களைப் பிள்ளையார் குளவி வடிவில் தண்டிப்பார் என்றும் அதனாலேயே 'குளவிப் பிள்ளையார்' என்ற பெயர் புராதன காலத்திலிருந்து வழங்கப்பெற்று வருகிறது என்றும் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் சித்தர்களாலும் ஞானிகளாலும் பூசிக்கப் பெற்ற புனிதம் மிக்க இவ்வாலயமும் இது அமைந்த நிலமும் ஆங்கிலேய ராச்சியம் ஓச்சிய ராணிக்கு உரியதாகியது.

இந்த நிலையில், இவ்வாலயத்தின் அருளைப் பெற்று உயர்ந்த மகான் மதன குரு சாமி என்பவர் 1903 இல் ராணியிடமிருந்து கோயிலையும் நிலத்தையும் பெரும் முயற்சி செய்து பெற்றார்.





இந்தியாவிலிருந்து ஐந்தரை அடி உயரமான அழகிய ஒரு பிள்ளையார் சிலையைக் கொணர்வித்து 1929இல் அதைத் ஸ்தாபித்து அழகிய கட்டடக்கலையுடன் கூடிய ஆலயமாக்கினார்.

மதனகுரு சாமியின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவியும் முருக பக்தையுமான பழநி அம்மா இந்த ஆலயத்தைப் பேணிவந்தார்.

நாட்டில் 83 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் இக்கோயில் பாதிப்புக்குள்ளாகி அழிவடையும் நிலைக்குச் சென்றது. 'கிராமோதயம் 87' கொண்டாட்டங்களை முன்னெடுத்த அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாசா அவர்களின் பணிப்புரையின் பேரில் 23.06.1987 அன்று இந்த ஆலயம் மீளவும் திருத்தியமைக்கப்பெற்றது.

பிரதமர் ஆர். பிரேமதாசா அவர்களால் புனரமைக்கப்பெற்ற ஆலயத்தின் முக்கியத்துவத்தை அப்போது நிறுவப்பெற்ற கல்வெட்டு சிறப்புறக் காட்டுகிறது. நாட்டில் இறுதி யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, 2007 இல் இந்த ஆலயம் மீளவும் பாதிப்புக்குள்ளானது. இங்கிருந்த ஐந்தரை அடி உயரமான மூலமூர்த்தி காணாமற்போய்விட்டது.

தடயமற்று அழியும் தறுவாயில் உள்ள இந்த ஆலயத்தில் கடையில் வாங்கிய ஒரு சிறிய பிள்ளையாரை வைத்து இப்போது வழிபடுகின்றனர்.

மதனகுருவின் பெறாமகனாகிய கந்தையா விஸ்வநாதன் ஆகிய நானும் மனைவியும் இந்த ஆலயத்தைப் பராமரித்து வருகின்றோம்.

இந்த ஆலயத்தைச் சூழவும் சுமார் 50 சைவத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. சிங்கள மக்களும் இவ் ஆலத்திற்கு வந்து செல்கின்றனர். சூழ உள்ள சைவத் தமிழ்க் குடும்பங்கள் வறிய நிலையில் உள்ளன. ஆனால் அங்குள்ள எல்லோருக்கும் ஆலயத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பு உள்ளது.

இந்த ஆலயம் திருத்தி மீளமைக்கப்பெற்றால் அவ்வாலயச் சூழலில் உள்ள சைவத் தமிழர்களுக்கும் பாத யாத்திரிகருக்கும் சிங்கள பக்தர்களுக்கும் பெரும் துணையாக இருக்கும்.

இந்த சுற்றுச்சூழலிலே தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் தஞ்சை நகரம் என்றிருந்த இந்த பிரதேசம் இன்று சுதுகம்பல என அழைக்கப்படுகின்றது. தூர்ந்து கிடக்கும் இவ் ஆலயத்தை புனரமைத்து தருமாறு வேண்டுகிறேன் என்றார்.

மிக விரைவில் ஆலயத்தை புனரமைத்து மக்கள் வழிபாட்டிற்காக திறந்துவைப்பதாக சங்கர் ஜி அங்கு தெரிவித்தார்.

கலந்து கொண்ட அனைவருக்கும் உருத்திராட்ச மாலை அணிவித்ததுடன் அனைவருக்கும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

ஆலயத்தை புனரமைத்து மக்களின் வழிபாட்டிற்காக திறந்து விடும் நாளை இந்துக்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.



# நல்லிணக்கத்தை வாழ வைக்கும் வழிபாட்டுத் தலங்கள்

**தர்மகுலசிங்கம் தர்மேந்திரா**

இலங்கை 1948 இல் சுதந்திரம் அடைந்தது. அது வரையில் இந்நாட்டு மக்கள் இலங்கையர்கள் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டிருந்தனர் என்றும் பிரித்தானியர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி காரணமாக இனத்தால், மொழியால், சமயத்தால், கலாசாரத்தால், பண்பாட்டால் வேறுபட்ட மக்கள் கூட்டங்களாகப் பிரிந்து நிற்கத் தொடங்கினர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசியல், கல்வி, உயர் கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களில் இது பிரதிபலிக்கத் தொடங்கியதால் சிறுபான்மைத் தமிழர்கள் எதிர்ப்புக் காட்டத் தலைப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா சொல்கின்ற அளவுக்கு நிலைமை மாறியது. 1970 களில் தமிழ் இளையோர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். 1983 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி இரவு தலைநகர் கொழும்பில் கறுப்பு ஜூலைக் கலவரம் வெடித்தது.

மற்றொரு சிறுபான்மைச் சமூகத்தினரான முஸ்லிம்கள் சந்தர்ப்பவாதிகளாக சிறுபான்மைத் தமிழர்களாலும், பெரும்பான்மை சிங்களவர்களாலும் உணரப்பட்டனர். உள்நாட்டு யுத்தம் எல்லா இன மக்களையும் பலியெடுத்தது. இடையிடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் நீடித்த சமாதானத்துக்கு வழி கோலவில்லை. மாறாக மூன்று தசாப்த காலங்களுக்கு மேல் யுத்தம் நீடித்தது. யுத்த காலப் பாதிப்புகளுக்கு உச்சம் வைத்தது போல 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால்ப் பேரழிவு இடம்பெற்றது. அதற்கு மேல் யுத்தம் நீடிக்கவில்லை என்றாலும் அதன் பாதிப்புகள், தாக்கங்கள், எச்சங்கள் இதுவரையில் தொடர்கின்றன. மறுபுறத்தில் இனத்தால், மொழியால், சமயத்தால், கலாசாரத்தால், பண்பாட்டால் வேறுபட்ட மக்கள் இலங்கையர்களாக மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்று சமாதானப் பிரியர்கள், தேசப் பற்றாளர்களால் தொடர்ந்தேச்சையாக அன்று முதல் இன்று வரை வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

வேற்றுமையில் ஒற்றுமை காணுதல் என்ற அடிப்படையில் பொதுவாக மனிதர்களாகவும், விசேடமாக இலங்கையர்களாகவும் இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும். அப்போதுதான் இந்நாடு சுபீட்சம் அடையும் என்பதுடன் நாட்டு மக்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ வழி பிறக்கும். எனவேதான் புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, சகோதரத்துவம், சக வாழ்வு, சமாதானம் போன்ற உயரிய விழுமியங்களைக் கைக்கொண்டு பின்பற்றுவதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற சமூக நல்லிணக்கம் காலத்தின் தேவையாக கண்முன் நிற்கின்றது. அதே போல கடந்த கால அனுபவங்களை படிப்பினைகளாகக் கொண்டு வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி, நம்பிக்கையீனம், வஞ்சனை போன்ற விசமத்தனங்கள் களையப்படுதல் வேண்டும்.

சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கி வளர்ப்பதிலும், பேணிப் பாதுகாத்து நிலைநாட்டுவதிலும் சமயங்கள் மிகப் பிரதான பங்கு வகிக்கின்றன. சமயங்கள் ஒவ்வொன்றும் வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால் எல்லா சமயங்களும் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்று இந்து சமயம் வாழ்த்துகின்றது. மனிதர்களின் இதயங்களை வெல்ல முயற்சி செய்யுங்கள் என்று புத்தபிரான் போதித்திருக்கிறார். இறந்த யூதர் ஒருவரின் உடலத்துக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தினார் நபிகள் நாயகம். உன்னை போல் அயலவனையும் நேசி என்று கிறிஸ்தவ சமயம் போதிக்கின்றது. சமயத் தலங்கள் சமூக நல்லிணக்கத்துக்கான போதனைக் களங்கள் ஆகும். வழிபாட்டுத் தலங்கள் வழிகாட்டிகள் ஆகும்.

### இந்து - பௌத்த நல்லிணக்கம்
### புத்தருக்குப் பூசை செய்யும் இந்து குரு



அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு தமிழ்க் கிராமத்தில் பிரதான வீதியில் அமையப்பெற்றுள்ளது அரசடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம். விநாயகர் ஆலய வளாகத்தில் அரசமர நிழலில் புத்த பகவான் ஆலய நிர்வாகத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் காட்சி கொடுக்கின்றார். பிரதான வீதிக்கு அருகில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இவர்களுடைய வழிபாட்டுக்காகவே இந்த ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

‘பிள்ளையாரை வழிபட வருகின்ற இந்துக்கள் புத்த பகவானையும், புத்த பகவானை வழிபட வருகின்ற பௌத்தர்கள் பிள்ளையாரையும் வழிபடுகின்றமையை கண்கூடாக காண முடிகின்றது, அதே போல தமிழ் இந்துக்களும், சிங்கள பௌத்தர்களும் இணைந்து வெசாக், போசன் போன்ற பண்டிகைகளை இங்கு கொண்டாடுகின்றனர்’ என்று இங்கு காவலாளியாகக் கடமையாற்றுகின்ற ஆறுமுகம் தெரிவிக்கின்றார்.

இரத்மலானையில் அமையப்பெற்றுள்ளது நந்தீஸ்வரம் ஆலயம். பழம்பெரும் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்று. போர்த்துக்கேயரால் 1518 இல் நிர்மூலம் செய்யப்பட்டது. அங்கு பூசைகள் நடத்தி வந்த குப்புசாமி குருக்களையும், குடும்பத்தினரையும் அந்த இடத்திலேயே படுகொலை செய்தனர். குருக்களின் ஒரு மகனை பிடித்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து பெர்னான்டோ என்ற சிங்களவர் வழிபாட்டு இடத்தை பராமரிக்கத் தொடங்கினார்.

### நந்தீஸ்வரம் ஆலயம்



இவருடைய வழித் தோன்றல்களே தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக இந்த ஆலயத்தைப் பராமரித்து வருகின்றனர். சிவன் ஆலயம் இருந்த அதே இடத்தில் 1717 இல் பௌத்த வழிபாட்டுத் தலத்தை ஒத்ததாக முருகன் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. கதிர்காம முருகன் ஆலயத்தை ஒத்ததாக இங்கு பூசைகள் நடத்தப்படுகின்றன. இதையும் பாரம்பரியமாகச் சிங்களவர்களே நடத்தி வருகின்றனர். இந்நிலையிலேயே ‘கொனாபெந்தி கத்தரகம தேவாலய’ என்றும் ‘கோணா கோயில்’ என்றும் பௌத்த சிங்களவர்கள் மத்தியில் நந்தீஸ்வரம் புதிய பெயர்களைப் பெற்றது.

பெர்னான்டோ குடும்பத்தின் அனுமதியுடன் 1980 இல் சிவன் ஆலயம் அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 2005 இல் சிவன் கோவில் நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று ஆலய வளாகத்தில் சிறிய விகாரை ஒன்றும் காட்சி அளிக்கின்றது. தமிழ் இந்துக்களுக்கும், சிங்கள பௌத்தர்களுக்கும் இடையிலான நல்லிணக்க உறவுப் பாலமாக நந்தீஸ்வரம் மிளிர்கின்ற அதேவேளை வடக்குக்கும், தெற்குக்கும் இடையிலான தொடர்புப் பாலமாகவும் பரிணமிக்கின்றது. வட மாகாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் இந்துக்கள் நந்தீஸ்வரத்தின் வளர்ச்சியிலும், எழுச்சியிலும் கூடுதல் பங்களிப்புகளை வழங்கி வருகின்றமையை இன்றைய நாட்களில் அவதானிக்க முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ-9 பிரதான வீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமையப்பெற்றுள்ள முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் வடக்குக்கும், தெற்குக்கும் இடையிலான பிரசித்தி வாய்ந்த உறவுப் பாலம் ஆகும்.

‘இவ்வீதி வழியாக பயணிக்கின்ற வாகனங்கள் அனைத்தும் தரித்து நின்று முறிகண்டி பிள்ளையாரை தரிசித்துச் செல்கின்றன. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பது போல காக்கும் தெய்வமாக முறிகண்டி பிள்ளையாரைப் பயணிகள் நம்பி வழிபடுகின்றார்கள், அனைத்து மக்களுக்கும் பொதுவானவராக முறிகண்டிப் பிள்ளையார் விளங்குகின்றார்’ என்று இப்பகுதியில் கச்சான் விற்பனை செய்யும் ஜெனிற்றா கூறுகின்றார்.

### முறிகண்டிப் பிள்ளையார்
### இந்து - இஸ்லாமிய நல்லிணக்கம்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் இந்து - இஸ்லாமிய நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமாக இப்பிரதேசத்தை சேர்ந்த பொதுநலச் செயற்பாட்டாளர் முஹமட் முஸ்தபா முஹமட் நிசாம் அடிக்கடி வலியுறுத்திக் கூறுகின்ற ஒரு விடயத்தைப் பதிவு செய்ய வேண்டி இருக்கின்றது. ‘சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்துகின்ற வகையில் அக்கரைப்பற்று பத்திரகாளி அம்மன் கோவில், அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் ஆகியவற்றுக்கு ஒரே நாளில் அடிக்கல்கள் நாட்டப்பட்டன. இவை இரண்டும் நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்தவை மட்டுமல்ல இப்பிரதே



சத்தின் மிகப் புராதன வழிபாட்டுத் தலங்களாகவும் உள்ளன’ என்று குறிப்படுகின்றார். பத்திரகாளி அம்மன் ஆலய அடிக்கல் நாட்டு விழாவில் இஸ்லாமியத் தலைவர்களும், பெரிய பள்ளிவாசல் அடிக்கல் நாட்டு விழாவில் இந்து சமயக் குருமாரும் பங்கேற்றுள்ளனர்.

கல்முனைக்குடியில் அமைந்துள்ள கடற்கரைப் பள்ளிவாசல் உற்சவத்தில் இந்துக்கள் கலந்து கொண்டு நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றுகின்றார்கள், சாம்பிராணி ஏற்றியும், உப்புக் காணிக்கை கொடுத்தும் நாகூர் ஆண்டகையை வழிபடுகின்றார்கள் என்று ஓய்வு நிலை ஆசிரியரும், ஊடகவியலாளருமான ஜுல்பிகா ஷெரிப் குறிப்பிடுகின்றார்.

### கொக்கட்டிச்சோலை
### தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தி வாய்ந்த கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் பட்டாணித் திருவிழா தமிழ் - முஸ்லிம் நல்லிணக்கத்தை பறைசாற்றி நிற்கின்றது. 1990 வரை முஸ்லிம்களே பட்டாணித் திருவிழாவை நடத்தி வந்துள்ளனர். இப்போது தமிழர்களே நடத்துகின்றபோதிலும் பட்டாணித் திருவிழா என்கிற பெயரிலேயே இத்திருவிழா தொடர்கின்றது. மட்டக்களப்பில் தமிழர்களுக்கும், திமிலர்களுக்கும் இடம்பெற்ற யுத்தத்தில் தமிழர்களுக்குப் பட்டாணி முஸ்லிம்கள் உதவி செய்தனர். பட்டாணிகள் மட்டக்களப்பிலேயே குடியேறி முக்குவப் பெண்களை மணந்து வாரிசுகளை பெருக்கிக் கொண்டனர் என்பது வரலாறு. பட்டாணித் திருவிழா தமிழ் மக்களின் நன்றியறிதலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. தான்தோன்றீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டபோது அவருடைய மூதாதையர்கள் தோணிகளில் செங்கற்களை அன்பளிப்பாக அனுப்பியுள்ளனர் என்று முன்னாள் அமைச்சரும், புத்திஜீவியுமான ஏறாவூரைச் சேர்ந்த பஷீர் சேகு தாவூத் தெரிவிக்கின்றார்.

### இந்து - கிறிஸ்தவ நல்லிணக்கம்

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கு இந்துக்கள் திரண்டு சென்று வழிபடுகின்றனர். செவ்வாய், ஞாயிறு தினங்களில் கூடுதல் இந்துக்களை இங்கு காணலாம். அன்னை மரியாளிடம் கவலைகளைச் சொல்லிக் கதறுகின்றனர். இந்துக்களின் தாய்த் தெய்வ வழிபாட்டுடன் இது பொருந்தி நிற்கின்றது.மேரியையும், மாரியையும் ஒன்றாகக் காண்கின்றனர். குழந்தை இயேசுவை முருகனாகக் காண்கின்றனர். இதே போலவே பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் யாழ். மாவட்ட இந்துக்களோடு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.

### கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்
### பௌத்த - இஸ்லாமிய நல்லிணக்கம்



குருணாகல் மாவட்டத்தில் நகரத்தின் மத்தியில் யானை படுத்திருப்பது போல குன்று ஒன்று காணப்படுகிறது. வத்ஹிமி அல்லது கலே பண்டார என்று அழைக்கப்படுகின்ற இஸ்லாமிய மன்னன் ஒருவர் குருணாகல் இராச்சியத்தை குறுகிய காலங்கள் ஆட்சி செய்துள்ளார். இவரின் இயற்பெயர் குர்ஷான் ஷெய்யது இஸ்மாயில் என்பதாகும். இவருடைய ஆட்சிக் காலம் 1288-1290 ஆக இருக்க வேண்டும் என்று ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. முதலாம் புவனேகபாகு மன்னனுக்கும், அவருடைய முஸ்லிம் மனைவிக்கும் பிறந்தவர்தான் இந்த இஸ்லாமிய மன்னன், இவர் சதி மூலமாக யானைக் குன்றில் இருந்து வீழ்த்திக் கொல்லப்பட்டார், மன்னன் இறந்த பின்னர் அமானுஷ்ய சம்பவங்கள் நடப்பதாக மக்கள் நம்பினர், தினமும் குதிரையில் நகர் வலம் வருவதை மன்னன் வழக்கமாகக் கொண்டிருந்தார், இறந்த பின்னரும் அவர் குதிரையில் நகர் வலம் வருகின்றார் என்று மக்கள் நம்பினர், எனவே இவரைக் காவல் தெய்வமாகப் பிரகடனம் செய்தனர் என்று இப்பிரதேசத்தைச் சேர்ந்த உபுல் குமார தெரிவிக்கின்றார்.

### தெய்வமாக்கப்பட்ட முஸ்லிம் மன்னன்



முஸ்லிம் மன்னனின் உடல் குருணாகல் கச்சேரி வீதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ‘கலே பண்டார அவுலியா’ என்று முஸ்லிம்கள் இவரை அழைக்கின்றார்கள். சிங்களவர்கள் ‘கலே பண்டார தெய்யோ’ என்று அழைக்கின்றார்கள். இவருக்கான ஷியாரத்தை ( வழிபாட்டுத் தலத்தை ) முஸ்லிம்கள் மாத்திரம் அல்லர், ஏராளமான சிங்களவர்களும் தரிசித்து வழிபடுகின்றனர். மேலும் சிங்கள மக்கள் இவருக்கு கலே பண்டார தேவாலய என்கிற பெயரில் தனியாக வழிபாட்டுத் தலம் அமைத்து வழிபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பிரதேச செயலகப் பிரிவில் ஜின்னா நகரில் பௌத்தத் தூபி 1990 களில் படையினரால் நிர்மாணிக்கப்பட்டு 20 வருட காலங்கள் வழிபடப்பட்டது. இஸ்மாயில் மஹ்ரூப் என்பவரின் வீட்டை அண்டி நிலைகொண்டிருந்த படையினரே இத்தூபியை நிர்மாணித்து வழிபட்டு வந்த நிலையில் இப்பகுதியை விட்டு வெளியேறத் தயாரானபோது தூபியை அகற்ற முற்பட்டனர். ஆனால் தூபியை அகற்ற வேண்டாம் என்று படையினரைக் கேட்டுக்கொண்ட மஹ்ரூப் அவராகவே தூபியைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தூபியை இவரும், இவரின் மனைவியும் கண்ணும் கருத்துமாக பராமரித்து வருகின்றனர். இப்போது இப்பகுதியில் சிங்களவர் யாருமே கிடையாது, உண்மையான முஸ்லிமாக இருந்து ஏனைய சமயத்தவர்களின் உணர்வுகளை மதிக்கின்ற காரணத்தால்தான் பௌத்தத் தூபியை பராமரித்துப் பாதுகாத்து வருகின்றேன் என்று 62 வயதுடைய மஹ்ரூப் தெரிவிக்கின்றார்.

### பௌத்தத் தூபியை பராமரித்துப்
### பாதுகாக்கும் முஸ்லிம் தம்பதி





சர்வ சமய வழிபாடுகள் இந்நாட்டின் இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய நான்கு சமயத்தவர்களும் தரிசித்து வழிபடுகின்ற புனிதத் தலமாக உலகப் பிரசித்தி பெற்ற சிவனொளிபாத மலை விளங்குகிறது. பௌத்தர்கள் ‘ஸ்ரீபாத’ என்றும் இஸ்லாமியர்கள் ‘ஆதாமின் மலை’ என்றும் இதை அழைக்கின்றனர்.

சர்வ சமய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக கதிர்காமம் விளங்குகின்றது. நாடு பூராவும் இருந்து மக்கள் வருடாவருடம் கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை செல்வது வழக்கம்.



# நல்லிணக்கத்தை வாழ வைக்கும் வழிபாட்டுத் தலங்கள்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா வெந்நீரூற்றுப் புனித பிரதேசமும் சர்வ சமய வழிபாட்டுத் தலமாகும். வெந்நீரூற்றில் மக்கள் நீராடுவார்கள்.

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு தேவாலயமும் சர்வ சமய வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. மடு மாதா உற்சவத்தில் வருடாவருடம் பல இலட்சம் மக்கள் பங்கேற்பதை அவதானிக்க முடிகிறது.

ஒரு இதயத்தின் நான்கு அறைகளை போல நான்கு வகையான சமய தலங்களும் விளங்குகின்றன. அவை அவ்வாறு இயங்குதல் அவசியம் என்று உணரப்பட்டிருக்கின்றது. ஊக்குவிக்கப்படுகின்றது. உண்மையான சமயத் தலைவர்களும், உண்மையான சமயிகளும் ஒருபோதும் சமூகங்களுக்கிடையில் பிணக்கத்தை விதைப்பதே கிடையாது. நல்லிணக்கத்தையே விளைச்சலாகப் பெற வேண்டும் என்பதில் பற்றுறுதியுடன் இருக்கின்றனர்.

ஆனால் சமூகங்களைத் தொடர்ந்தும் பிரித்தாள வேண்டும். அதன் மூலம் சுய இலாபங்களை ஈட்ட வேண்டும் என்ற சிந்தனையில் செயற்படுகின்ற சமூக விரோத சக்திகள் ஒவ்வொரு சமூகத்திலும் ஊடுருவி நிற்கின்றன. அவை சமயங்களின் பெயரால் சமூகங்களைப் பிழையாக வழி நடத்த முற்படுகின்றன. அப்போதுதான் மதவாதம் தலைதூக்கப் பார்க்கின்றது. மனிதனுக்கு மதம் பிடிக்கக் கூடாது. அதாவது சமய உணர்வு வெறியாக மாறவே கூடாது. ஈஸ்டர் தினத்தில் சஹ்ரான் நடத்திய குண்டு வெடிப்புகளை உதாரணமாகச் சொல்லலாம். போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும்கூட சமூக நல்லிணக்க மையங்களான வழிபாட்டுத் தலங்கள் இலக்கு வைக்கப்பட்டுத்தான் உள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், காத்தான்குடிப் பள்ளிவாசல், நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயம், கண்டி தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைச் சொல்லலாம். கத்தோலிக்கத் தேவாலயங்கள் மீது சஹ்ரான் நடத்திய தாக்குதல்களையும் சொல்லலாம். அதே போல குறிப்பிட்ட சமயத்தின் பெயரால் சமய தலங்கள் மீது நடத்தப்படுகின்ற காணி ஆக்கிரமிப்புகளின் வடிவங்களை ஏற்று கொள்ளவே முடியாது. மேலும் நேர்மறையான எண்ணங்களை காலம் காலமாக சமயத் தலங்கள் ஏற்படுத்தி வருகின்ற நிலையில் எதிர்மறையான எண்ணங்களுக்கு வலுச்சேர்க்க கூடிய காட்சிப்பாடுகள், விடயங்களுக்கு வழிபாட்டு தலங்கள் இடம் அளித்தால் அது சமூக விரோத சக்திகளுக்கு வெற்றியாக அமைந்து விடும்.

காத்தான்குடி பள்ளிவாசலின் சுவர்கள் இரத்தக் கறை மாறாமல் இப்போதும் காட்சி தர வேண்டிய அவசியம் கிடையாது. இது ஒட்டுமொத்தத் தமிழர்கள் மீதும் முஸ்லிம்களுக்குக் காழ்ப்புணர்ச்சியை, வெறுப்பை இயல்பாக ஏற்படுத்தித் தூண்டக் கூடியதாகும். அதே போல வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் கோவிலுக்குள் உள்ள நினைவுத் தூபி ஒட்டுமொத்த முஸ்லிம்கள் மீதும் தமிழர்களுக்குக் காழ்ப்புணர்ச்சியை, வெறுப்பை இயல்பாக ஏற்படுத்தக் கூடியது.



சமூக நல்லிணக்க மையங்களான வழிபாட்டுத் தலங்களில் மிரட்டுகின்ற, வெறுப்பூட்டுகின்ற, சந்தேகப்பட வைக்கின்ற காட்சிப்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**காத்தான்குடிப் பள்ளிவாசலின் சுவர்கள்**

**வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் நினைவுத் தூபி**

சமூக நல்லிணக்க மையங்களாக அரசாங்கம் வழிபாட்டுத் தலங்களைப் பிரகடனம் செய்ய வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளுக்கான பாட விதானங்களில் வழிபாட்டுத் தலங்கள் மூலமான சமூக நல்லிணக்கம்



போதிக்கப்படுதல் வேண்டும். குறிப்பாகச் சர்வ சமய வழிபாடும், ஏனைய சமயங்களும் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். நாம் இந்த இடத்தில் ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது. ஆட்சியாளர்களும் சரி, அரசாங்கங்களும் சரி முன்னுதாரணமாக நடக்க வேண்டியுள்ளது. எந்த சமயத்துக்கும் விசேடமாகவோ, தனித்துவமாகவோ முன்னுரிமை, முதலிடம் வழங்கப்படவே கூடாது. அனைத்து சமயங்களும் சமவுரிமையுடன் நடத்தப்பட வேண்டும். இதற்கு ஏற்றபடி அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும். அரசாங்கத்தின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவுடன் சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்கள் எந்த வடிவத்திலும் இலக்கு வைக்கப்படவே கூடாது. சமய நிந்தனை உட்பட வழிபாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் தண்டனைக்குரிய குற்றங்களாக சட்டப் புத்தகத்தில் மாத்திரம் இருந்தால் போதாது, நடைமுறையில் முறையாக அமுல்படுத்தப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். அதே போல கட்டாய மத மாற்ற நடவடிக்கைகளை முற்றாக ஒழிப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்குச் சமயத் தலைவர்கள், சமயிகள், பொதுமக்கள் அடங்கலாக அனைத்துத் தரப்புகளும் அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.



**முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹசன் அலி**

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமான எம். ரி ஹசன் அலி எமக்குக் கருத்து கூறுகையில் வழிபாட்டுத் தலங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் உணர்ச்சி வசப்பட வைக்கக்கூடியவை, எனவே இவ்விடயத்தில் பொது நல அக்கறையுடன் சம்பந்தப்பட்ட தரப்புகள் நடந்து கொள்ள வேண்டியிருக்கின்றது, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் சர்ச்சைக்குரிய விடயங்களுக்குத் தீர்வு காண முயற்சிப்பதே சாலப் பொருத்தமானதாகும் என்றார்.



**பேராசிரியர் நந்தன விஜேசிங்க**

சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்க விவகாரங்களின் துறை சார்ந்த நிபுணரும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை பேராசிரியருமான ஷாந்தி நந்தன விஜேசிங்க கருத்துக் கூறுகையில் மதங்கள் நல்லவற்றையே போதிக்கின்றன, மனங்கள்தான் மாற வேண்டியிருக்கின்றது என தெரிவித்தார்.



**ஊடகவியலாளர் ரஞ்சித் பெரேரா**

கத்தோலிக்கரும், ஆங்கில ஊடகவியலாளருமான ரஞ்சித் பெரேரா நல்லிணக்கத்தைப் பற்றி புதிதாக யாரும் இலங்கையர்களுக்குச் சொல்லித் தரத் தேவையில்லை, அரசியல்வாதிகள்தான் மக்களைப் பிரித்து வைத்திருக்கின்றனர், அரசியல் நோக்கங்களுக்காக இலங்கையர்கள் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள், சமயங்கள் மனித மனங்களைப் பக்குவப்படுத்துபவை என்றார்.

சர்வமத வழிபாடு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை வலுப்படுத்தி ஒன்றிணைய வைக்கின்றது, எமது சர்வமத பீடத்துக்கு எல்லாச் சமயத்தவர்களும் வருகின்றார்கள், வெளிநாட்டவர்கள்கூட வருகின்றார்கள், யாவருக்கும் புகலிடம் என்பதே எமது மகுட வாக்கியம் ஆகும், முஹமது நபி, புத்தர், யேசு ஆகியோரும் மனித குலத்தை வாழ வைக்கவே தோன்றினார்கள் என்று தெரிவிக்கிறார் காரைதீவு ஸ்ரீ சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமிகள்.

**ஜீவாகரன் சுவாமிகள்**

வழிபாட்டுத் தலங்கள் மூலமான சமூக நல்லிணக்கத்துக்குச் சவால்களாக இருக்கக் கூடிய விடயங்கள் சூரியனைத் தற்காலிமாக மறைத்து நிற்கின்ற மேகங்களைப் போன்றவை மாத்திரமே. நல்லதோர் வீணை செய்து அதை நலன் கெட புழுதியில் எறிவதுண்டோ என்கிற பாரதியார் பாடலை இத்தருணத்தில் நினைவூட்ட விளைகின்றோம்.









மூதூர் , கட்டைபறிச்சான் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா வியாழக்கிழமை (13) மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது விநாயகப் பெருமான் தேரில் அமர்ந்தவாறு பக்தர்களின் அரோகரா கோசத்துடன் வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாளித்தார்.இவ் தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**(படங்கள் - அ . அச்சுதன்)**

## உலக வரலாற்றில் பெண்களின் உண்ணாவிரத போராட்டங்கள்:

# ஈழத்தில் அன்னை பூபதியின் உயிரீகத்தின் உச்சம்!

**அமெரிக்காவில் பெண் உரிமைக்காக போராடிய அலஸ் ஸ்டோக்ஸ் பால்:**

அலஸ் ஸ்டோக்ஸ் பால் (Alice Stokes Paul) ஓர் அமெரிக்க பெண்ணியவாதியும், பெண்கள் உரிமை ஆர்வலர் ஆவார். அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்திற்கான பிரச்சாரத்தின் முன்னணி மூலோபாயவாதிகளில் இவரும் ஒருவர்.

அக்காலத்தில் தடைசெய்யப்பட்ட பெண் வாக்களிக்கும் உரிமைக்காகவும் பாலின பாகுபாட்டை எதிர்த்து அலஷ் பால், லூசி பர்ன்ஸ் மற்றும் பிறருடன் இணைந்து, பெண் வாக்குரிமை போராட்டங்களை முன்னின்று நடாத்தியவர்.

உரிமைக்கான பெண்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் வெற்றிகரமான பிரச்சாரத்தின் மூலம் அமெரிக்காவில் பிரபல்யமானார். இதன் விளைவாக ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

1885 இல் நியூ ஜெர்சியில் பிறந்த அலஷ் பால், (ஜனவரி 11, 1885 - ஜூலை 9, 1977) ஒரு சிறு வயதிலிருந்தே பெண்களுக்கான வாக்குரிமை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். அவர் சமூகப் பணியைப் படித்தாலும், குடியேற்ற வீடுகளில் ஏழைகளுக்குச் சேவை செய்தாலும், பெண்களுக்கான உரிமைக்காக

சமூகப் பணியை மேற்கொண்டார். உயர்கல்வியில் அவர் உயிரியல் மற்றும் சமூகவியலில் பட்டங்களை முடித்த பிறகு, பொருளாதாரம் மற்றும் சமூகவியலில் தனது படிப்பைத் தொடர 1907 இல் பிரிட்டனுக்குச் சென்றார்.

அவர் பிரிட்டனில் பெண்கள் சமூக மற்றும் அரசியல் ஒன்றியத்தில் (W-S-PU) சேர்ந்து, பெண்களின் சம உரிமைகளுக்காக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் ஒத்துழையாமை ஆகியவற்றில் பங்கேற்றார். இதன் விளைவாக, அவரும் பிரிட்டனில் உள்ள மற்ற பெண் வாக்குரிமையாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

**பெண் வாக்குரிமைக்காக போராட்டம்:**

Emm-e-l-i-ne மற்றும் Christabel Pankhurst தலைமையில், நிகுகக் உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி சிறையில் தங்கள் கட்டாய சிகிச்சை , உணவு அருந்துதலை எதிர்த்தனர்.

உண்ணாவிரத போராட்டங்கள் ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக மாறியது. ஏனெனில் அவை கூடுதல் தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. அதே காரணத்திற்காக மக்களிடம் அனுதாபத்தை பெரிதும் உருவாக்கியது.

1910 ஆம் ஆண்டில், பால் கிரேட் பிரிட்டனில் இருந்து அமெரிக்கப் பெண்களுக்கான சட்ட மற்றும் பொருளாதார சமத்துவத்திற்காக வேலை செய்யத் திரும்பினார், தேசிய அமெரிக்க பெண் வாக்குரிமை சங்கத்தில் (NAWSA) சேர்ந்தார். 1890 மற்றும் 1910 க்கு இடையில், மாநில வாரியான மூலோபாயம் சில மேற்கு மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தெருக் கூட்டங்கள், அணிவகுப்புகள் மற்றும் மறியல் போராட்டங்கள் உட்பட இங்கிலாந்தில் அவர் பங்கேற்றது போன்ற தேசிய அளவில் போர்க்குணமிக்க எதிர்ப்பு உத்திகளுக்கு மாற வேண்டியது என்று அலஷ் பால் நம்பினார்.

**பெண் உரிமைக்காக உண்ணாவிரதம்:**

இந்த அகிம்சை நடவடிக்கைகள் அனைத்தும் பெண்களின் தலைமை சரியான கிளர்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்தது. 1913 மார்ச் 3 ஆம் தேதி பெண் வாக்குரிமை ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்தனர். 8,000 க்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஊர்வலத்திற்காக அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெண் உரிமைக்காக ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் மூலம் ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

**தமிழ்நாட்டில் சுதந்திர போராட்ட முதல் பெண்மணி பத்மாசனி :**






இந்திய தேசத்தின் விடுதலைக்காக மாபெரும் அர்ப்பணிப்பை அளித்த பத்மாசனி வரலாற்றில் மறக்கப்பட்ட பெண் போராளியாவார்.

200 ஆண்டுகளுக்கு மேலாக அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு கிடந்த இந்திய தேசத்தின் சுதந்திரம் பல்லாயிரக்கணக்கான தியாகிகளின் தியாகத்தால் உருவானது. பத்மாசனி எனும் பெண் இந்த சுதந்திர போராட்டத்தில் தன் குழந்தைகளையே தியாகித்த ஒரு வீரத்தாயின் வரலாறு இன்று பலருக்கும் தெரியாது.

பாரதியாரின் பாடல்களை பட்டிதொட்டி எல்லாம் தமிழ் நாட்டில் பரப்பிய முதல் பெண்ணும் இவர்தான். நாட்டின் விடுதலைக்காக சிறை சென்ற முதல் பெண்.

மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் சோழவந்தானில் 1897-ல் பிறந்தவர்.

மதுரையைச் சேர்ந்த சீனிவாசவரதன் என்பவரை திருமணம் செய்து கொண்டவர். சீனிவாச்வரதனும் மகாகவி பாரதியாரும் மிக நெருங்கிய நண்பர்கள்.

ஒருமுறை பாரதியார் 'உன் சொத்தை விற்றேனும் பத்திரிக்கை நடத்த பணம் அனுப்பு' என்று கடிதம் எழுதியிருந்தார். மறுநாளே தனது சொத்தை விற்று பாரதியாருக்கு பணம் அனுப்பி வைத்தவர் வரதன். அத்தனை நெருக்கம்.

பாரதியார் பாடல்களை நாம் எல்லா இடங்களிலும் இன்று கேட்கலாம். ஆனால் அன்றைக்கு அப்படியில்லை. பாடல்கள் வெறும் காகிதத்தில் மட்டுமே இருந்தன. அதை தெரு தெருவாக பாடி, பஜனைகளில் பாடி மக்கள் மத்தியில் எழுச்சி ஊட்டியவர்கள் சீனிவாசவரதனும் பத்மாசனியும்தான்.

1922-ல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதற்காக வரதன் கைது செய்யப்பட்டார். சேதி கேட்டு ஓடிவந்த பத்மாசனி தனது கணவருக்கு திலகமிட்டு மாலை அணிவித்து சிறைக்கு அனுப்பி வைத்தார்.

அதுவரை கணவருக்கு உறுதுணையாக இருந்த பத்மாசனி முழுமூச்சாக நாட்டின் விடுதலைக்காக தானும் போராட்டத்தில் குதித்தார். தமிழ்நாட்டில் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட முதல் பெண்மணி என்ற பெருமை இவரை வந்து சேர்ந்தது.

கணவர் சிறைக்கு சென்றபின் தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொண்டார்.

தினமும் மாலை நேரத்தில் பாரதியார் பாடல்களை பாடியபடியே வீடுவீடாகச் சென்று கதர் விற்று வருவார். சுதந்திரத்திற்கு எதிராக இருப்பவர்களையும், ஆங்கிலேய அரசிடம் வேலைப் பார்ப்பவர்களையும் கூட கதர் வாங்க வைத்துவிடுவார். அவர் பேச்சில் அத்தனை வல்லமை இருந்தது.

பெண்களும் விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும் என்று இவரின் பேச்சால் பல பெண்களை சுதந்திர போராட்டத்திற்கு இழுத்து வந்தது.

1930-ல் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த பத்மாசனி மதுரை ஜான்சி ராணி பூங்கா முன் பேசிய பொதுக் கூட்டத்தில், இவர்

பேசியதற்காக ஆங்கிலேய அரசு பத்மாசனியை கைது செய்து ஆறு மாத சிறையில் தள்ளியது.

**பத்மாசனி சிறையில் உண்ணாவிரதம்:**

சிறையில் உணவு தொடர் உண்ணாவிரதம் இருந்தார். கர்ப்பவதிக்கான ஊட்டச்சத்து உணவு இல்லாததாலும் உடல்நிலை மோசமாக இருந்ததாலும் கர்ப்பம் கலைந்தது. சிறையில் இருந்து வெளிவந்ததும் மீண்டும் போராட்டத்தில் குதித்தார்.

அன்றைய காலகட்டத்தில் பொதுக்கூட்டங்களில்

பத்மாசனி பேசும் போது அனல் தெறிக்கும். இவரின் பேச்சு என்றாலே அக்கம் பக்க ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள் ஒன்று கூடிவிடுவார்கள். அவரது குரல் வெண்கலம் போல் கணீரென்று இருக்கும். பேச்சில் உணர்ச்சியும் வேகமும் குவிந்துக் கிடக்கும். மரக்கட்டைக் கூட வீறுகொண்டு எழும். தொண்டர்கள் பாதி கூட்டத்திலே ஆவேசமாக எழுந்து, இப்போதே வெள்ளையர்களை கூண்டோடு அழித்துவிடுகிறோம் என்று புறப்படுவார்கள். அத்தகைய வீரம் அவரது பேச்சில் இருக்கும்.

நாட்டின் விடுதலையை தவிர வேறு எதைப் பற்றியும் சிந்தனை செய்யாத பத்மாசனிக்கு ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இறந்திருந்தன. தேச சேவைக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அவருக்கு இரண்டு குழந்தைகளுமே ஒரு வயதை அடையும் முன்னே இறந்து போயிருந்தனர்.

**அனல் தெறிக்கும் வீரப் பேச்சு :**

காவிரி நடையாத்திரையில் விடுதலையைத் தவிர எனக்கு வேறு எதுவும் பெரிதல்ல என்று கலந்து கொண்டார். வழிநெடுக சுதந்திரப் பிரச்சாரம், பாரதியார் பாடல்கள், சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை தந்த தியாகிகளின் வரலாறு என்று நடைப் பயணம் முழுவதும் சுதந்திர வேட்கை ஜோதி சுடர்விட்டு எரிந்தது. எட்டு மாத கர்ப்பத்துடன் 48 மைல் தூரம் நடந்தே வந்தார்.

அந்த நேரத்தில் அவருக்கு பிரசவம் ஆனது. அழகான பெண் குழந்தை பிறந்தது. கடுமையான குளிர், பாதையோரம் தங்குவதற்கு நல்ல இடம் வேறு இல்லை. பிறந்த மூன்றாவது நாளில் அந்த குழந்தையும் இறந்தது. அம்மையாரின் உடலும் மோசமாக பாதிக்கப் பட்டது. ஓய்வுக்காக உடல் கெஞ்சத் தொடங்கியது. சில நாட்கள் மட்டும் ஓய்வெடுத்தார்.

உடலில் கொஞ்சம் தெம்பு வந்ததும் மீண்டும் நடக்கத் தொடங்கினார். பத்மாசனியின் பேச்சு மகாத்மா காந்தியடிகளையும் கவர்ந்திருந்தது. பெல்காமில் காந்தி தலைமையில் நடைப்பெற்ற கூட்டத்திற்கு சிறப்பு பேச்சாளராக பத்மாசனியை காந்தி அழைத்திருந்தார்.

**இந்திய விடுதலைக்காக மூன்று குழந்தைகளை இழந்தவர் :**

விடுதலைக்காகவே தனது மூன்று குழந்தைகளையும் பலிகொடுத்த இந்த தாய் இந்தியாவின் விடுதலையை பார்க்காமலே இந்த மண்ணை விட்டு மறைந்தார். தன் உடல்நிலையைப் பற்றி கவலைப் படாமல் நாட்டைப்பற்றியே சிந்தித்த இவர் கடைசி



யில் 14.1.1936 இந்திய சுதந்திரத்தை காணாமலேயே விண்ணுலகம் சென்றார்.

**மணிப்பூர் மக்களுக்காகப் போராடிய ஷர்மிளா இரோம் :**

இந்திய சுதந்திரத்தின் பின் ஒரு பெண் 14 வருடங்களாக உண்ணா விரதம் இருந்தார். அந்த உண்ணாவிரதத்தை முடித்து வைக்க அரசாங்கமே தலை கீழாக நின்று முயற்சி எடுத்து தடுக்க முற்பட்டது.

1942-ம் ஆண்டு மணிப்பூரின் இம்பால் பகுதியில் பிறந்த ஷர்மிளா இரோம் சிறுவயதிலிருந்தே சமூகச் சிந்தனை யோடும், சமுதாயம் சார்ந்த கட்டு ரைகளை எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தவர்.

2000-ம் ஆண்டு நவம்பர் 2 அன்று மணிப்பூரின் மலோம் பகுதியில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் இருந்த பத்து பொதுமக்களை ராணுவ வீரர்கள் சுட்டுக் கொன்றதைப் பார்த்த மனித உரிமைப் போராளியான ஷர்மிளா இதனைக் கடுமையாக எதிர்த்தார்.

ஆயுதப்படைக்கு அளித்துள்ள சிறப்புஅதிகாரச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்து 14 வருடங்களாக உண்ணா விரதம் இருந்த ஒரு பெண் போராளியாக உலகின் கவனத்தை ஈர்த்தார். அவர் உண்ணா விரதம் இருக்கத் தொடங்கியதை அடுத்து ராணுவம் அவரை கைதுசெய்தது. அப்போதும் அவர் உண்ணா விரதத்தைக் கைவிடவில்லை. ஆனால், அவர் இறந்துவிடுவாரோ என்கிற பயத்தில் ராணுவம் அவரை விடுதலை செய்தது.

அதன்பிறகும் அவர் உண்ணா விரதத்தை கைவிட்டபாடில்லை. உண்ணா விரதம் தற்கொலைக்கான முயற்சி என ஷர்மிளாவை சாப்பிட வைக்கும்படி உறவினர்களை மிரட்டியது ஆளும் அரசு. ஆனாலும்

ஷர்மிளாவோ தன்கோரிக்கையைக் கைவிடவில்லை.

**15 ஆண்டு உண்ணாவிரதம் இருந்த பெண் போராளி:**

உடல் உபாதைகளினால் அவரது ஒவ்வொரு உறுப்பும் வலுவிழந்தது. அப் போது அவரது மூக்கின் வழியே திரவ உணவு மட்டும் செலுத்தப்பட்டது. 14 ஆண்டுகளாகத் தொடர்ந்த இந்த உண்ணாவிரதத்தை பார்த்த மணிப்பூர் மக்கள், அரசியலுக்கு வாருங்கள். உங்களுக்கு ஓட்டுப் போடுகிறோம் என்று அழைத்தனர். 'நான் மணிப்பூர் மக்களுக்காகப் போராடும் போராளி, அரசியல்வாதி அல்ல' என்றுகூறி மறுத்தார். ஷர்மிளாவின் உண்ணா விரதம் 15-ம்ஆண்டில் அரசின் தலையீட்டால் நிறுத்தப்பட்டாலும், என் உயிர் போனாலும் பரவாயில்லை. என்றாவது ஒரு நாள் என்பகுதி மக்களின் நிலை மாறும்' என்கிற விடாமுயற்சியில் ஷர்மிளாவின் உண்ணாவிரதம் தொடர்ந்தது. ஷர்மிளாவின் விடா முயற்சி உலகின் கண்கள் மணிப்பூர் மக்களுக்காக விழிப்படைந்தது என்பது உண்மையே.

**ஈழத்தில் அன்னை பூபதி உயிரீகத்தின் உச்சம் :**

ஈழத்தில் கோரமான போர் தீவிரம் அடைந்திருந்த 1988இல் உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்டுத்தி, பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டி, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

31 நாள் நோன்பிருந்த பத்துப்பிள்ளைகளின் தாயான

அன்னை பூபதி மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணியின் முக்கிய செயற்பாட்டாளர்.

பூபதியம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை.

அன்னை பூபதி (நவம்பர் 3, 1932 - ஏப்ரல் 19, 1988), மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக சாகும் வரை உண்ணா நிலையிருந்து உயிர் நீத்தவர்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராக குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். போரிடும் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும். இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையின் பின்னர் அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப்படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணா நோன்புப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988ம் ஆண்டு ஜனவரி 4 ம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

1988 ம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் தேதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை முறியவே சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

**அன்னையர் முன்னணி போராட்டம் :**

அப்போது பலர் சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார்.

1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணாநோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

**அன்னைபூபதி போராட்டம் :**

இந்த நிலையில் தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தை மார்ச் 19 1988 இல் தொடங்கினார். முன்னெச்சரிக்கையாக 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது' எனக் கடிதம் எழுதி வைத்தார். பத்துப்பிள்ளைகளுக்கு, தாயார் இவர். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார். அன்னை பூபதியின் நினைவுநாள் ஈழத்தில் நாட்டுப்பற்றாளர் நாளாக என்றும் நினைவு கூறப்படுகிறது. உலகளாவிய ரீதியில் பெண்கள் அடக்குமுறைகளை எதிர்க்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஓர் எழுச்சி வடிவமாகவே கருதி போராடி இருக்கின்றனர். உயிரீகத்தின் உச்சம் தொட்ட அன்னை பூபதியம்மா ஈழ மண்ணில் தன் உயிர்க் கொடையால் தியாகத் தாயாக என்றும் விளங்குகின்றார்.

**நவீனன்**